Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-16 | 01-09-2005 | வியாழக்கிழமை | ஓசை-196



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:104. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12760)

## தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடன மாநாடு கிளி.யில் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி!

(அலுவலகசெய்தியாளர்)

வவுனியா பிரகடனத்தினை வலியுறுத்திய தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடன மாநாடு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதென தமிழ் தேசிய எழுச்சி செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டினைபொட்டி கிளிநொச்சி டிப்போச்சந்தியிலிருந்து கிளிநொச்சிகந்தசுவாமி ஆலயம்வரையுள்ள ஏ-9 நெடுஞ்சாலையின் இருமருங்கும் தமிழ்தேசிய எழுச்சிமாநாட்டு கொடிகள் மற்றும் சிவப்பு,மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி பொது விளையாட்டுமைதானத்தில் சகல பகுதிகளிலும் மேற்படி கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், மின்விளக்குகள் பொருத்தப்பட்டு சிறப்பாக காட்சியளித்த வண்ணமுள்ளதனை காணக் கூடியதாகவுள்ளது.

மற்றும் மாநாட்டுக்கு வருகை தரும் மக்களுக்கான குடிநீர் வசதிகள், முதலுதவிச்சிகிச்சைகளுக்கான வசதிகள் வாகனத்தரிப்பிடவசதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அரசியல்துறை போ.நி.க.குழு சந்திப்பு

(மன்னார்)

மன்னார் போர் நிறுத்தக் கண் காணிப்பு குழுவினருக்கும், மன்னார் மாவட்ட அரசியல் துறையினருக்கு மிடையிலான சந்திப்பொன்று நேற்று மன்னார் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் பணிமனையில் இடம் பெற்றது.

மாலை 3.00 மணியளவில் இடம் பெற்ற இச்சந்திப்பில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்களத்தில் புலிகளின் சாதனைகளுக்கு மக்கள் படை உறுதுணையாக இருந்தது!



## திருமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம்

*போர்க்களத்தில் விடுதலைப்புலிகள் நிகழ்த்திய சாதனைக்கு மக்கள் படை பெரும் உறுதுணையாக செயற்பட்டது என்று திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார். திருமலை மாவட்ட கிராமிய விசேட பயிற்சிப் படையினரின் முதலாவது தொகுதி வீரர்களின் போர்ப் பயிற்சி நிறைவு விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.*

மேலும் அவர் தெரிவிக்கையில்; "வன்னி மண்ணில் சிறிலங்கா இராணுவத்தின் ஜெயசிக்குறு நடவடிக்கையால் ஒரு வருடம் இரண்டு மாதங்கள் நெருக்குதலுக்கு உள்ளாகியிருந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ்.இல் எதிர்ப்புப் போராட்டம்!

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் தேசியத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்துவரும் தமிழ் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதுமான வன்முறைகள் மீண்டும் அதிகரித்துச் செல்லும் நிலையில் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி இன்று முற்பகல் 10-30 முதல் 1.00 மணிவரை யாழ்ப்பாணத்தில் அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் பலகோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## தெகிவளையில் பொலிஸ்,இராணுவம் தேடுதல் 28 அப்பாவி தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

தெகிவளை பொலிஸ் பிரிவுக்குள் நேற்று முன்தினம் மாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய தேடுதல் நடவடிக்கைகளில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழிநுட்பக் கல்லூரி மாணவர்கள், வெளிநாடு செல்ல வந்தவர்கள் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். வீடுகள், தங்குமிடங்கள், கடைகள் ஆகியவற்றில் இருந்தவர்களும் வீதிகளில் சென்றவர்களுமே

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் தொடர் தாக்குதல்கள் ஐந்து படையினர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை நடந்த கைக்குண்டு தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் சிறிலங்கா இராணுவ சிப்பாய்கள் நான்கு பேரும்,பொலிசார் ஒருவரும் காயமடைந்து வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி மாவடி வேம்பு இராணுவ காவலரண் மீது நேற்றுக் காலை 6.20 மணியளவில் ஈருருளியில் சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளார்கள்.

மற்றுமொரு சம்பவத்தில் காலை 7.00 மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் அருகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மற்றும் இராணுவத்தினர்மீது கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதிலும் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

- குண்டுதாரி குறித்துப் பரவிய வதந்தியால் -

# நெரிசலில் சிக்கியும் ஆற்றில் வீழ்ந்தும் பாக்தாத்தில் 1000க்கு மேற்பட்டோர் பலி!



காயமடைந்தோரை ஏற்றிச் செல்லும் வாகனங்கள்

(பாக்தாத்)

ஈராக்கில் ஹதுமியா பள்ளிவாசலுக்கு முக்கியதொழுகை ஒன்றிற்காகச் சென்ற ஷியாமுஸ்லிம் மக்கள் மத்தியில் குண்டுதாரி ஒருவர் இருப்பதாகக் கூறப்பட்டதை அடுத்து நெரிசலில் சிக்குண்டும், உயிரைப்பாதுகாக்க அருகில் இருந்த ரைகிறிஸ் நதியில் கூட்டமாகக் குதித்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனக்கூறப்படுகின்றது.

ஹதுமியா பள்ளிவாசலுக்கு முக்கிய மதஅனுட்டானத்திற்காக சென்றிருந்த ஷியா முஸ்லிம் மக்கள் மத்தியில் குண்டுதாரி ஒருவர் இருப்பதாகக்கூறப்பட்டதை அடுத்து மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. இதனால் உயிரைப்பாதுகாக்க திக்குத் தெரியாது ஓடியமக்கள், பாலம் ஒன்றின் மேலாக பெருமளவில்

(12ஆம் பக்கம் பார்க்க)



ரைகிறிஸ் நதியில் மீட்புப்பணி

# நன்னீர் மீன்பிடித் திட்டத்தை மேம்படுத்த உதவி வழங்கல்

நன்னீர் மீன்பிடித்திட்டத்தினை ஊக்குவிக்கும் முகமாக நேற்று முற்பகல் 11.00 மணிக்கு மன்னார் மாவட்டத்திலுள்ள பாலப்பெருமாள் கட்டு வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள சிறுவர் பாடசாலையில் மன்னார் மாவட்ட நனனர் கூட்டுறவுச சங்கத் தலைவர் செ. இராசரத்தினம் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், யு.என்.டி.பி இலங்கைக்கான பிரதிநிதி கவாகசன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்

தேசியக் கொடியை த.பொ.மே நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே. விசுவலிங்கம் யு.என்டி.பி இலங்கைக்கான பிரதிநிதி கவாகசன், த.பொ.மே.நி பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

60 சிறு மீன்பிடிப் படகுகளும், 400 மீன்பிடி வலைகளும் என 12 மீன்பிடிச் சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு 29 இலட்சம் பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன. (46)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி விசேட வேலைத்திட்டங்கள்

(தென்மராட்சி)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தீர்மானித்திருப்பதாக வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் நடராசா தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 12 தொடக்கம் 18 வரையான நாட்களில் சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளில், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் நடத்துவதுடன் இப்பிரதேசத்திலுள்ள எல்லா பொதுக் கிணறுகளுக்கு குளோரினிடல் மற்றும் கட்டாக்காலி நாய்களை அழித்தல், சந்தைகள், மயானங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சிரமதானங்களை மேற்கொள்வதுடன் சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பயன்தரும் மரங்களை பொது இடங்களில் நாட்டியும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் சம்பந்தமான துண்டுப் பிரசுரம், பதாகைகள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (28)

# குடிநீர் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் பெரும் அவதி

(தென்மராட்சி)

ஊர்காவற்றுறைப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டால் பொது மக்கள் பெரும் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள், வியாபார நிலையங்களை வைத்திருப்போர் குடிநீர் தட்டுப்பாட்டால் பல மைல்கள் தூரம் சென்று குடிநீரை எடுத்து வருவதாகவும் மெலிஞ்சிமுனை, தம்பாட்டி ஆகிய கிராமங்கள் அதிக அளவில் வறட்சியின் பிடியில் சிக்கி இருப்பதுடன், குடிநீர் கிடைக்காததால் உவர் நீரைக் குடிக்கும் சூழ்நிலை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும், இதுகுறித்து இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் முறையிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

(முல்லை)

முல்லை வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புது/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளதால் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு முல்லை. வலய தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (08)


## காணி விற்பனைக்குண்டு

*கிளிநொச்சியில் அமைந்துள்ள வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பின்பக்கமுள்ள ஆலயத்திற்கு அருகிலுள்ள 14-பரப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு.*

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
கிளிநொச்சி நகரம்,
கிராமசேவை உத்தியோகத்தர்,
இராஸ்வரன் என்பவருடன்,
தொடர்பு கொள்ளவும்.

(சி.12658)

## பகிரங்க அறிவித்தல்

கட்டாக்காலிகளாக பயிர் அழிவு செய்த கால் நடைகளும், வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு செய்த கால் நடைகளும், த.பொ.மே நிறுவனத்தினால் கட்டுப்படுத்தி பொதுப்பட்டியில் கட்டப்பட்டுள்ளது. உரிமையாளர் த.பொ.மே நிறுவனம் கிளிநொச்சியில் தொடர்பு கொண்டு 04.09.2005 இற்கு இடையில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெள்ளைப் பசு - குறி இல்லை
கறுப்புக் கன்று - P.T
சிவப்புக் கன்று - S.M
கறுப்பு எருது - V.A
சிவப்பு வெள்ளை மறை - P.S.K.N 5566
மயிலைப் பசு - T.R 82
வெள்ளைப் பசு - S.N 671
வெள்ளைப் பசு -P.R
சிவப்பு சுட்டிப் பசு - S.P661
மாவெள்ளை - S.P.661

தகவல்
த.பொ.மே.நிறுவனம் கிளிநொச்சி

(6679)





# ஈராக்கில் விமானக்குண்டு வீச்சு 56 பேர் பலி; பலர் படுகாயம்

ஈராக்கில் சிரியாஎல்லை அருகே அல்-ஹைதா தீவிரவாதிகளின் மறைவிடங்கள் எனக் கருதப்படும் இடங்களில் நேற்றுமுன்தினம் அமெரிக்க விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 56 இற்கும் மேற்பட்டோர் பலியாகியதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.



தீவிரவாதிகள் இப் பகுதியில் பாதுகாப்பான மறைவிடங்களில் தங்கியிருப்பதாகவும் இதனையடுத்தே மூன்று முறை விமானமூலம் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


கடந்த வாரத்தில் இதுபோன்று இரண்டு தாக்குதலை அமெரிக்க விமானப்படைத் தரப்பு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் கோடைகால விடுமுறையை குறைத்துக்கொண்டார்

ஐக்கிய நாடுகளின் வறுமைக் கெதிரான திட்டங்கள் சம்பந்தப்பட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் தனது கோடைகால விடுமுறையை குறைத்துக்கொண்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மீளாய்வு மற்றும் புதிய அணுகு முறைமைகளுக்கான சர்வதேச முறைமைகள் சம்பந்தமாக செப்ரெம்பர் 14 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 175 உலகத்தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த மாநாட்டில் தலைவர்கள் இத்திட்டத்தை அங்கீகரிப்பார்கள் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் எதிர்பார்க்கின்றார்.





பிளக்சி மிசுசிப்பியில் கற்றினா சூறாவளிக்கு முன்பு இடம்பெயர்ந்து வந்த பெண் ஒருவர் தனது வீடும், வியாபார நிலையமும் அழிந்திருப்பதைக் கண்டு கதறி அழுகின்றார்.



நியூஓர்லியன்சில் வீசிய கற்றினா சூறாவளிக்குப் பின் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட பகுதி.

# அமெரிக்காவில் வீசிய "கற்றினா" சூறாவளிக்கு பலியானவர் எண்ணிக்கை 120 ஆக உயர்வு

(வோஷிங்டன்)


**அமெரிக்காவில் புளோரிடா, லூசியானா, மிசுசிப்பி, அலபாமா ஆகிய மாகாணங்களைத் தாக்கிய கற்றினா சூறாவளிக்கு பலியானோர் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது.**

வளைகுடா கடலோரப் பகுதியில் உருவான கற்றினா என்ற சூறாவளி அமெரிக்காவின் புளோ ரிடா லூசியானா,மிசு சிப்பி, அலபாமா ஆகிய மாகாணங்களைத் தாக்கியது.

இந்த மாகாணங்களில் உள்ள ஏராளமான நகரங்களை சூறாவளி புரட்டி எடுத்தது.

இந்தப்புயலுக்கு 55 பேர் உயிர் இழந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் வீடுகள் இடிந்து விழுந்ததிலும், வெள்ளத்தில் சிக்கியும் பலியானவர்கள் எண்ணிக்கை 120ஆக உயர்ந்து விட்டது. ஏராளமான நகரங்களுக்குள் கடல்நீர் புகுந்ததாலும் மழை வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது. பலியானவர்களின் உடல்களை உலங்குவானூர்திகளில் தேடுகிறார்கள். வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களையும் உலங்கு வானூர்திகளில் இராணுவத்தினர் மீட்டு வருகின்றார்கள். மணிக்கு 232 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளிக்காற்று வீசியதில் இலட்சக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி விட்டன. கடலில் 25 அடி உயரத்திற்கு இராட்சத அலைகள் எழுந்தன. நியூஓர்லியன்ஸ் பகுதியிலிருந்த மிக உயரமாக ஒருதேவாலயமும் இடிந்து விழுந்து விட்டது. நியூஓர்லியன்ஸ் நகரம் முழுவதும் தண்ணீரில் மூழ்கிக் கிடப்பதாக கூறப்படுகிறது. மிசுசிப்பி மாகாணத்தில் மட்டும் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 54 பேர் பலியாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்ள தாராளமாக உதவுங்கள் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நாட்டுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.






# ஆயுதக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை மீறும் நாடுகளின் வரிசையிலிருந்து லிபியா விலகியது

சர்வதேச ஆயுதக்கட்டுப்பாட்டு உடன்படிக்கையை மீறுகின்ற நாடுகளில் ரஷ்யா, வடகொரியா,ஈரான் ஆகிய நாடுகள் அடங்குகின்றன.

ஆனால் இந்த வரிசையிலிருந்து லிபியா தன்னை நீக்கிக் கொண்டிருக்கின்றதென்று அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு உடன்படிக்கையை மீறும் நாடுகளுக் கெதிராக எத்தகைய எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இராஜாங்க அமைச்சின் அறிக்கை குறிப்பிடவில்லை. சர்வதேச சமூகம் உடன்படிக்கைக்கு மாறாக நடந்து கொள்ளும் இந்தப் போக்கினை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது.

விசேடமாக செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கர வாதத்தாக்குதலுக்குப் பின்னர் ஆயுத ஒழிப்புக்கு எதிரான ஒரு போக்கு காணப்பட்டது.

ஆனால் 2003ஆம் ஆண்டு ஆயுத ஒழிப்பைக் காரணம் காட்டி ஈராக்கின் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

ஈரான் தனது அணுத்திட்டத்தைக் கைவிட்டால் ஐரோப்பிய யூனியன் அதற்குப் பதிலாக சலுகைகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தாலும் ஈரான் அவற்றை நிராகரித்துள்ளது.

வடகொரியாவின் அணுத்திட்டத்தைக் கைவிடச் செய்வதற்காக இடம்பெற்ற ஆறு தரப்புப் பேச்சுவார்த்தை தடைப்பட்டுள்ளது. அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை எப்பொழுது நடைபெறுமென உறுதிசெய்யப்படவில்லை.

இது அமெரிக்காவின் தூண்டுதலின் பெயரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# குவைத்தில் பல இந்தியர்கள் வேலையிழக்கும் அபாயம்

குவைத் அரசு தனது பிரஜைகளுக்கென தனியார் துறை பணிகளை ஒதுக்க முடிவு செய்திருப்பதை அடுத்து அந்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நிர்வாகத்திலும் வேறு உயர் பதவிகளிலுள்ள இப்போதைய வேலையை இழக்கக் கூடும் எனத் எதிர்பார்க்கப்படுகிறது.



காஸாவிலிருந்து யூதர்கள் அகற்றப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு பலஸ்தீனர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கென ஜெருசேலம் நீதிமன்றத்திற்கு வருகைதரும் அசர் வீஸ் கன் என்ற இஸ்ரேலியர்.

# பங்களாதேஷில் 1975இல் நடந்த இராணுவப் புரட்சி சட்டவிரோதமானது என உயர்நீதிமன்று தீர்ப்பு

(டாக்கா)

பங்களாதேசத்தில் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடந்த இராணுவப் புரட்சியின்போது முதல் சனாதிபதி முஜிபுர்ரகிமான் கொல்லப்பட்டார். இந்தப் புரட்சி சட்ட விரோதமானது. அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று அந்த நாட்டு உயர்நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

இராணுவ ஆட்சியின்போது டாக்காவிலுள்ள சினிமா திரைஅரங்கை இழந்த மகதுல் ஆலம் சினிமா அரங்கை மீண்டும் பெறுவதற்காக இராணுவப் புரட்சியை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். நீதிபதிகள் கைருல்ஹக், பஸ்லே கபீர் ஆகியோர் விசாரித்து இந்த இராணுவப் புரட்சியையும், அதனால் ஏற்பட்ட ஆட்சியையும் சட்ட விரோதமானவை என்று தீர்ப்பு கூறினர்.

முஷ்டாக் அகமது இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்தது சட்டத்தை மீறிய செயலாகும். எனவே அந்த ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களும் உத்தரவுகளும் செல்லாது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அபுசதாத் முகமது, ஜியாவுர் ரகிமான் ஆகியோர் சனாதிபதி ஆனதும் கூட சட்ட விரோதமானவை என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்யும் என்று அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# சர்வதேச சந்தையில் பெற்றோல் விலை அதிகரிப்பு

சர்வதேச சந்தையில் பெற்றோல் விலை பீப்பாய் ஒன்றுக்கு 70 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் கற்றினா புயல் காரணமாக பெற்றோல் சுத்திகரிப்புப்பணி முடங்கிப்போனது. இதனால் கச்சா எண்ணை உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தான் விலை உயர்ந்துள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

# தீவிரவாதிகள் - இராணுவம் சவுதியில் துப்பாக்கிச் சண்டை

(ரியாத்)

சவுதி அரேபியாவில் ஜீபைல் என்ற தொழில் நகரத்தில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அல் ஹைதா தீவிரவாதிகளை எதிர்த்து சவுதிஅரேபியா போராடி வருகிறது. இதில் 91 பேர் கொல்லப்பட்டனர். 41 தீவிரவாதிகள் கடந்த இருவாரத்தில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பள்ளிமுனைக்கிராம மக்கள் குடங்களுடன் கண்டனப் பேரணி

(மன்னார்)

**மன்னார் பள்ளிமுனை கிராம மக்கள் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக தண்ணீர்க் குடங்களுடன் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.**

இந்தக் கிராமத்திற்கு குழாய் மூலமான குடிநீர் வசதி சரிவர செய்து கொடுக்கப்படவில்லை எனவும் இதனால் தாம் பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் மன்னார் அதிகாரிகள் இது தொடர்பில் எந்தவித கவனமும் செலுத்தவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமது கிராமம் அரச அதிகாரிகளால் வஞ்சிக்கப்பட்டு, நீர்வழங்கலுக்கு ஒதுக்கப்பட்டபணம் வேறு பகுதிகளுக்கு செலவிடப்படுவதாகவும் மன்னார் செயலகத்தில் கையளிக்கப்பட்ட மனுவில் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (18)

## அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல் நேற்று முன்தினம்முள்ளியவளை பிரதேச அரசியல்துறை செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

காலை 10.00 மணியளவில் மாவட்டத் தலைவி கௌரி புத்திரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கருத்துரைகளை முள்ளியவளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சரவணன், முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி ஆகியோர் வழங்கினார்கள். இதன் போது சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகவும், அன்னையர்முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பாகவும், தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி கருத்துரைகளை வழங்கினார்.இந் நிகழ்வின்போது எதிர்வரும் 14ஆம் திகதி முல்லைத்தீவில் மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள எழுச்சிப் பிரகடனம் தொடர்பான கருத்துக்களும் வழங்கப்பட்டன.இக் கலந்துரையாடலில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் மற்றும் அன்னையர் முன்னணியின் சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது (20)



கடந்த திங்கட்கிழமை வன்னிபுனத்தில் ராஜ் முன்பள்ளி நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல்லினை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நாட்டிவைத்தபோது. (படம் பிரதீபன்)

## குளம்புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்

(மல்லாவி)

மாங்குளம் பிரதேசத்தில்அம்பகாமம் கிராம அலுவலர் பிரிவின் புல்வேலன்குளம் 10ஆயிரம்குள திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குளங்களுக்கான உறுதிப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் புல்வேலன் குளம் அருகாமையில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது.

காலை 10.00 மணிக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி இ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் இத்திட்டம் சம்பந்தமாகவும் குளங்களின் மதிப்பீடு சம்பந்தமாகவும் கருத்துரைகளை முல்லை மாவட்ட கமநல உதவிஆணையாளர் ந.சிவலிங்கம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் வ. சிவாஜி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாங்குளம் பிரதேச இணைப்பாளர் க. ஜெகன், கிராம அலுவலர்கள் ஆகியோர் வழங்கினர். (24)



யாழ். மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் கடமையாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அ. இராசநாயகம், ஆர். எக்ஸ் அரசநிலை க. சாந்தகுமார் ஆகியோருக்கு வங்கியின் ஊழியர் நலன்புரிச் சங்கம் சேவை நலன் பாராட்டு விழாவினை அண்மையில் நடாத்தியது. இவ் விழாவில் மக்கள் வங்கி வட வலய உதவி பொது முகாமையாளர் மு.க சிவபாதவிருதயர், ஓய்வு பெற்ற சாந்தகு மாருக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## கலந்துரையாடல்

தனியார் கல்வி நிலையம், கணினி பயிற்சி நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் முல்லைத்தீவு அரசியல்துறை பொறுப்பாளர் தலைமையில் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில்அமைந்துள்ள மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது. சிரமத்தை பாராது சகல கல்வி நிலைய நிர்வாகிகளும் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

### பதின்மூன்று ஈழத் தமிழர்கள் தலைமன்னார் வருகை

(மன்னார்)

தமிழ்நாடு திருச்சி மாவட்டம் கோசப்பற்று அகதிமுகாம்/சிவகங்கை மாவட்டம் தேவன் கோட்டை ஆகிய முகாம்களில் வசித்து வந்த பதின்மூன்று ஈழத்தமிழ் அகதிகள் கடந்த திங்கட்கிழமை அதிகாலை தலைமன்னார் வந்தடைந்தனர்.

இவர்கள் சிறிய படகு மூலம் அழைத்துவரப்பட்டு மணல் திட்டில் இறக்கிவிடப்பட்டனர். அவர்களை அவ்வழியால் வந்த சிறிலங்கா கடற்படையினர் தம் படகு களில் ஏற்றி வந்து தலைமன்னார் பொலிசாரிடம் பாரப்படுத்தினர். அவர்களை தலைமன்னார் பொலிசார்நேற்று முன்தினம் காலை மன்னார் நீதி மன்றத்தில் முன்நிறுத்தினர்.

மன்னார் நீதிபதி எம். எம். அப்துல்லாவின் உத்தரவுக்கு இணங்க அவர்களின் சொந்த இடமான கல்மடு, பெரியதம்பனை வவுனியா, பேசாலை நானாட்டான், மூத்தகரை, உப்புக்குளம் ஆகிய இடங்களுக்கு மன்னார் கிராம உத்தியோகத்தர் ஈ.ஜே.மிராண்டா ஊடாக அனுப்பி வைக்கப்பட்டனர். (18)

## முல்லையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடிநீர்க்கிணறுகள் பாவனைக்குதவாத நிலையில்

### -கவனிப்பாரற்ற நிலையில் மக்கள்

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடிநீர்க் கிணறுகள் தற்போது மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளதால் இப்பிரதேசத்தில் குடிநீர் பெறுவதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையென இப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்(20).

## ஊடகவியலாளர் தடுத்து வைப்பு!

(திருகோணமலை)

மூதூர் கட்டைபறிச்சான் சிறிலங்கா இராணுவ காவலரணில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் கிழக்குப் பகுதிக்குள் பிரவேசிப்பதற்காக பத்திரிகையாளர்கள் கட்டைபறிச்சான் இராணுவ தடைமுகாம்களின் ஊடாகச் செல்லும் போதே தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் அடையாள அட்டை பதிவு, சோதனை செய்து இராணுவத் தளபதியின் முடிவு வரும்வரை பத்திரிகையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## முல்லை மாணவிகள் இருவர் ஜப்பான் நாட்டிற்கு சுற்றுலா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் தாய், தந்தையரை, சகோதரர்களை இழந்த பிள்ளைகள் இருவர் சர்வோதயத்தினால் ஜப்பான் நாட்டிற்கு சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்டார்கள்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் கள்ளப்பாட்டைச் சேர்ந்த தர்மராசா - குகசாந்தினி (வயது-16) ,கோவில் குடியிருப்பு முல்லைத்தீவைச்சேர்ந்த அன்ரனிதாசன்- ஜீவிதா (வயது -14).ஆகிய இருவருமே நேர்முகத்தேர்வில் தெரிவாகி கடந்த மாதம் 29ஆம் திகதி அன்று ஜப்பானுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஜப்பான் பிரதமரைச் சந்தித்ததாகவும், பலமுக்கிய தீவுகளையும் தாம் பார்வையிட்டதாகவும், அங்கு இலங்கையிலிருந்து 15 மாணவர்கள் வருகை தந்திருந்ததாகவும் அதில் ஐந்து தமிழ் மாணவர்கள், ஐந்து முஸ்லிம் மாணவர், ஐந்து சிங்கள மாணவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.



சுனாமியினால் மட்டுமல்லாது போரினால், எயிட்ஸ் நோயால் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் எண்பதுபேரும் வருகை தந்திருந்ததாகவும், தாம் அங்கு நின்ற போது ஒருபூமி அதிர்ச்சி ஜப்பானில் ஏற்பட்டதாகவும், தாம் மிகவும் பயந்ததாகவும் தம்முடைய பயண அனுபவங்களை மாணவர்களுக்குத் தெரிவித்தார்கள். தாம் அங்கு சென்று வந்ததால் தமக்கு ஓரளவு மனம் சந்தோசமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## யாழ். இல் பொது மக்கள் நடமாடும் பிரதேசத்தில் இராணுவம் பயிற்சி

### - பொது மக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை மற்றும் சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றை அண்டியுள்ள பொதுமக்கள் நடமாடும் பிரதேசங்களில் இராணுவத்தினர் அண்மைக்காலமாக பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

தினமும் மாலை வேளைகளில் இராணுவத்தினர் பொதுமக்கள் நடமாட்டமுள்ள வீதிகளில் மேற்கொள்ளும் இப்பயிற்சி நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுததாரிகளாக பெருமளவு இராணுவத்தினர் வீதிகளில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அப்பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் விசனம் தெரிவித்துள்ளதுடன்,

மக்களை அச்சுறுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்படும் இப்பயிற்சி நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (33)

## இரதோற்சவத் திருவிழா

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த இரதோற்சவத் திருவிழா நாளைவெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இம்மாதம் பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய வருடாந்த மகோற்சவம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் நாளை இரதோற்சவமும் நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் அதன் மறுநாளான ஞாயிற்றுக்கிழமை தீர்த்த பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறுவதுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழா முடிவுறும். (37)

## பொன்னாலை மீனவர்களின் வலைகள், மீன்கள் திருட்டு

(வலி.மேற்கு)

பொன்னாலை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் வலைகள், மீன்கள் இரவு நேரங்களில் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடற்றொழிலாளர்களின் சொந்த நிலங்களை கடற்படையினர் அபகரித்து நிலை கொண்டுள்ளனர்.

இதனால் தமது குடியிருப்பு இடங்களில் வாழ முடியாது பொன்னாலையிலுள்ள அயற் கிராமங்களான மூளாய், தொல்புரம், சுழிபுரம் போன்ற பகுதிகளில் பாதுகாப்பற்ற நிலையில் மேற்படி தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர்.

இந் நிலையில் அவர்களது அன்றாட வாழ்விற்காக பல கெடுபிடிகளுக்கு மத்தியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட மேற்படி தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாதுள்ளதுடன் திருட்டுச் சம்பவங்களும் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல சிரமங்களுக்கு மத்தியில் கடன்பட்டு வலைகளை வாங்கி தொழில் செய்து வரும் தொழிலாளிகள் அந்த வலையைப் பறிகொடுத்த பின்னர் மீண்டும் ஒரு வலையை வாங்கி தொழிலில் ஈடுபட முடியாதிருப்பதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இத்திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளதொழிலாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (37)

# இன்று கிளிநொச்சியில் தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடனம்

## வரலாற்றுத் தடத்தை பதிக்கின்ற நாள்

(மா.சிவபாலன்,தலைவர்,தமிழ் தேசிய எழுச்சிச் செயலணி,கிளிநொச்சிப் பிரதேசம்.)



செப்-01 விடுதலைப் போராட்டத்தின் இன்னொரு திருப்புமுனை.

செப்ரெம்பர் முதல் நாள் கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றிலே முக்கியமான வரலாற்றுத் தடத்தைப் பதிக்கின்ற நாள். இம் மாவட்டத்திலே வாழ்கின்ற அனைத்து மக்களும் ஆண், பெண், இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர் என்ற வேறுபாடுகளை மறந்து மக்கள் சமுத்திரமாக அணி திரண்டு கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடை பெற்றுக்கொண்டிருக்கும் தேசிய இன விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மிகப்பலமான நிலையிலே நின்று கொண்டு சர்வதேச சமூகத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்கள்.

சர்வதேச சமூகமே தமிழ்தேசிய இனத்தின் விடுதலை உணர்விற்கு மதிப்பளி!

சர்வதேச சமூகமே தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!

என்று முழக்கமிடப் போகின்றார்கள். இப்பேரொலி சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சி கதவுகளை தட்டி உலுப்பப் போகிறது. அதன் தாக்கம் தமிழ்தேசிய விடுதலைப்போராட்ட வரலாற்றிலே மேலுமொரு பரிமாணத்தை ஏற்படுத்தும் எனவே செப்ரெம்பர் முதல் நாள் ஒரு வரலாற்றுப் பதிவு.

## உண்மையை சர்வதேச சமூகம் உணர்ந்தால்...

*(வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம்,கிளிநொச்சி.)*



தமிழர் செறிந்து வாழும் பகுதியான இலங்கையின் வட கிழக்கு 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறதா? சர்வதேச சமூகம் இலங்கைத் தீவின் பிரச்சினை தொடர்பாக முக்கியமாக இக் கேள்விக்கு விடை தேட வேண்டி உள்ளார்கள்.

இன்று பெருந்தொகையாக தமிழர் பிரதேசத்தில் குவிக்கப் பட்டிருக்கும் படைகளில் தமிழரை மருந்துக்கும் காண முடியாது. இதற்குக் காரணம் இப்படை 20 வருடமாக தமிழர் மீது தொடுத்த கொடூரமான வன்செயல்கள் தான், இக் கொடூர சரித்திரமும் இன்று தமிழரற்ற இப்படையும் இது வொரு ஆக்கிரமிப்புப் படை என்பதை உறுதி செய் கின்றது.

இன்று இந்த தமிழர் எழுச்சிப் பேரவை சர்வதேச சமூகத்திடம் இவ் உண்மையை உளமார உணர்ந்து அறியுமாறு வேண்டி நிற்கின்றது. இவ் உண்மையை சர்வதேச சமூகம் உணர்ந்தால், மக்களின் தன்னாட்சி உரிமையை மீட்டுத்தருவது அதன் கடப்பாடு என்பதையும் சர்வதேச சமூகம் அறியாமல் இருக்க முடியாது.

போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சர்வதேச சமூகம் போர்க் கொடுமையின் ஆழமான வடு தீருவதற்கான வழிகளைப் பரிந்துரைத்த போதும் அதை அரசு உதாசீனம் செய்தது. இதனால் சமாதான முன்னெடுப்புக்கள் உடைந்தன. சுனாமி அழிவால் மக்கள் துடித்த போது உதாசீனத்தின் உச்சத்தின் உதாரணமாக நடந்து காட்டியுள்ளது.

இக் கொடூரத்திலிருந்து மீள தமிழர் சர்வதேச சமூகத்திடம் வேண்டுவது தம் தன்னாட்சி உரிமையை அல்லாமல் வேறு எதையும் அல்ல.

## காலப்பதிவின் கடமைக்கு கை சேர்ப்போம்.

(கிளிநொச்சிமாவட்ட கல்வி மேம்பாட்டுப்பேரவை,கிளிநொச்சி.)

தமிழ் மக்களின் எழுச்சிக் குரலாக தமிழ்த் தேசியத்தையும் சுய உரிமையையும் அங் கீகரிக்கக் கோரி கிளிநொச்சி மாநகர் வரலாற்றில் கண்டிராத மாபெரும் மனித உணர் வெழுச்சியை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் நிகழ்விற்கு கல்விப்புலம் சார்பாக அனைவரும் கடல் அலையாகக் கலந்து எமது உணர்வெழுச்சியையும் உரிமைப்பிரகடனத்தையும் சர்வ தேசத்திற்கு பறைசாற்றுவோம்.

## நாங்கள் நமது தலைவிதியை நிர்ணயிப்போம்

*(அ.கேதீஸ்வரன்,தலைவர்,மாவட்டக்கூட்டுறவுச்சபை,கிளிநொச்சி.)*

சூனியத்துக்குள் தள்ளிவிட்ட தமிழ் மக்களின் வரலாற்று புரள்வை இம் மாவட்ட மக்கள் அனைவருமே ஒன்று திரண்டு தூக்கி எறியும் நிகழ்வு இங்கு நடந்தேறப்போகிறது. வட-கிழக்கு இணைந்த சுயாட்சி அலகுக்குள் எம்மை நாமே நிர்வகிக்க சம்மதித்த போதும் எமது உணர்வுகளை ஓரங்கட்டினீர்கள். இயலாமைக்குள் நுழையத்தயாராக இல்லை என்பதனை ஏற்க மறுத்தீர்கள்.

ஆனால் எமது அபிலாசைகள் வேறு என்பதனை நீங்கள் உணரவும், 20 ஆண்டுகள் போராடிய எமது அபிலாசைகள் இயல்பு நிலைக்கு திரும்புதல் மட்டுமல்ல என்பதனையும் நியாய பூர்வத்தீர்வுக்கு நீங்கள் வர மறுத்தால் நாங்கள் நமது தலைவிதியை நிர்ணயிப்போம் என்பதனையும் இன்று உங்களுக்கு காட்ட எடுத்திருக்கும் வன்முறையற்ற வடிவமாக இவ் எழுச்சியை நீங்கள் கருதி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற நியாயப் பாட்டுடன் எமது மாவட்டம் திரண்டு வருகிறது.

இந்த மக்கள் எழுச்சியும் எமது வரலாற்று நிகழ்வு போலவே முடிவுறுத்தப்படின் அது சுதந்திரத்தின் தூரத்தை மிகக் குறுகியதாக்கும் போது எங்களுக்கு நீங்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் எதுவும் இருக்காது. இந்தச் செய்தியே இந் நாளின் கருத்தும் காத்திரமும் ஆகும்.

## தமிழீழத்தினுடைய அபிலாசையை வெளிப்படுத்தும் நாள்

(சி.பாபு,தலைவர்,வர்த்தகசங்கம், கிளிநொச்சி)



வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் நடைபெறும் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வின் நோக்கம் என்னவென்றால் இலங்கைத்தீவிற்கு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளரிடம் இருந்து சுதந்திரம் அடைந்த நாள் தொட்டு இம்மண்ணை ஆட்சி செய்கின்ற அனைத்து பேரினவாத அரசுகளும் தமிழ் மக்களுடைய இறைமை சுதந்திரம் மறுக்கப்பட்டு தமிழ் இனத்தின் மீது கொடுங்கோல் ஆட்சி செலுத்தப்பட்டு வருகின்றது. அந்தப்பாதையில் தமிழர்கள் தங்களுடைய இறைமையைப் பாதுகாப்பதற்காக பல வழிகளில் போராடி வந்திருக்கின்றார்கள். இன்று இரண்டு தசாப்தகால போர் ஓய்ந்து அமைதி உடன்படிக்கையின் மூலம் தமிழர்களுடைய இறைமையை பேசி தீர்வுபெறும் வகையில் சர்வதேச அனுசரணையாளர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட போர் நிறுத்தம் கேள்விக்குறியான நிலையில் இருப்பதாலும் தமிழர்கள் தங்களுடைய சனநாயக ரீதியான வாழ்வையும்ஒட்டுமொத்த தமிழினத்தினுடைய அபிலாசையும் உலகிற்கும், சிறிலங்கா ஆட்சி யாளர்க்கு வெளிப்படுத்தவும் தங்களுடைய இறைமையைத் தக்கவைக்கவுமான நிகழ்வுதான்இன்று நடைபெறுகின்ற எழுச்சிநாள்.

## தமிழ்தேசிய இனத்தின் இறைமையை அங்கீகரி

(ச.த.சத்தியமூர்த்தி,மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்,கிளிநொச்சி.)

அடக்கு முறைக்கு உட்பட்ட தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது அதன் பிறப்புரிமை. ஐரோப்பியரின் வருகையால் இழந்த தனது இறைமையை மீட்டெடுப்பதற்காக கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்தேசிய இனம் போராடி வருகின்றது. அப் போராட்டமானது பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுக் கூர்மையடைந்த நிலையில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வைப்பெற்றுத் தருவதற்கு அழுத்தம் கொடுப்பதுடன் நீதிக்கும், தர்மத்திற்கும் உட்பட்ட விடுதலைப்போராட்டத்தை அங் கீகரிக்குமாறும் தமிழ்தேசிய இனம் சர்வதேச சமூகத்தை வேண்டி நின்றது. ஆக்கபூர்வமான எந்த முன்னேற்றமும் இந்த மூன்றரை ஆண்டுகாலப் பகுதியில் ஏற்படாததால் ஒடுக்குமுறைக்கு உட்பட்ட தமிழ்த்தேசிய இனம் தனது குரலை ஓங்கி ஒலிக்க வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகும். எனவே தான் அந்த தேசியக் கடமையை நிறைவேற்றுவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் வாழுகின்ற அனைத்து மக்களும் மக்கள் சமுத்திரமாக இன்று அணி திரளுகின்றார்கள்.

## தமிழீழமே எங்கள் மூச்சு

*சர்வதேச சமூகமே தமிழ்தேசிய இனத் தின் இறைமையை அங்கீகரி!

*சர்வதேச சமூகமே தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங் கீகரி!

*சர்வதேச சமூகமே தமிழ்தேசிய இனத்தின் விடுதலை உணர்விற்கு மதிப்பளி!

என்று வானைப்பிளக்க குரல் எழுப்பப்போகிறார்கள். இக்குரல் சர்வதேச சமூகத்தின் காதுகளில் ஓங்கி ஒலிக்கப்போகிறது. இப்பேரொலி சர்வதேசத்தின் மனச்சாட்சியை மீண்டுமொரு முறை உலுப்பி தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் மேலுமொரு பரிமாணத்தை ஏற் படுத்துமென நம்புகின்றேன்.

## எமது உரிமைக்குரலை சர்வதேசத்திற்கு ஓங்கி ஒலிக்கச் செய்வோம்

(சு.பசுபதிப்பிள்ளை,செயலாளர்,தேசியஎழுச்சிப்பேரவை,கிளிநொச்சி மாவட்டம்.)



தென்னிலங்கையில் இன்றுபயங்கரமான சிங்கள-பௌத்த பேரினவாதம் தலை விரித்தாடுகின்றது. இதன் காரணமாக தமிழ் மக்களின் சனநாயக வழியிலான எந்தவொரு தீர்வுகளையும் எட்ட முடியாத வகையில் அதற்கான கதவுகள் இறுக்கமாக மூடப் பட்டுள்ளது. எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் தாயக மண்ணிலிருந்து வெளியேற மறுத்து நிற்கின்றது. இதன் விளைவாக எமது மக்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களை விட்டு ஏதிலிகளாகபலவருட காலங்கள்முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே எமது தாயக நிலத்தினை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும்.எமதுதலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும். மரபுவழித்தாயகம், தேசிய இனம்,தன்னாட்சி எனும் அடிப்படையில் எம்மையும் எமது போராட்டத்தினையும், சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதனை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தும் வகையில் இன்று பிற்பகல் 3.00மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் அனைவரும் கிளர்ந்தெழுந்து எமது உரிமைக்குரலை சர்வதேசத்திற்கு ஓங்கி ஒலிக்கச் செய்வோம்.

## தமிழர்களது அபிலாசைகளைச் சர்வதேசம் புரிந்து கொள்ளவேண்டும்


(சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக்குருக்கள்,பிரதம சிவாச்சாரியார்,முருகன் தேவ ஸ்தானம்,கிளிநொச்சி.)

அனைத்து உலக சமுதாயமும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் அவலவாழ்வை இத் தேசியஎழுச்சி மாநாட்டின்மூலமாக உணர்ந்து இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சுனாமி பேரழிவாலும், போர் நடவடிக்கைகளாலும் பாதிப்புற்று இருக்கும் தமிழர்கள் நிம் மதியாகவும், தமது சொந்த இடங்களில் வாழ்வை அமைத்துக்கொள்ளவும், பாதிப்புற்ற மக்கள் நிவாரண உதவிபெறவும், புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள், கொலைகள், ஆட்கடத்தல் போன்ற துயரசம்பவங்கள் நிறுத்தப்பட்டு தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர சகல சமூகமும், இலங்கை அரசும் முன்வரவேண்டும். சகல தமிழ் மக்களும் தமது கோரிக் கையை முன்வைத்து ஒன்று கூடி நடாத்தப்படும் இப்பேரெழுச்சி மாநாடு நன்மையளிக்க வேண்டுமென மனநிறைவு கொள்கின்றேன்.

தொகுப்பு:- கனகபுரச்சோதி

# சனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் எதிர்கொள்ளும் சவால்கள்



நன்றி:- டெய்லி மிரர்

லங்காதீப சிங்கள நாளிதழ்
சி.ஜே.அமரதுங்க
மொழியாக்கம். அ.சக்திவேல

சனாதிபதித்தேர்தலுக்கான எல்லா ஆயத்தங்களையும் ஐக்கியதேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் செய்தவண்ணம், இரு வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். இந் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவும், மகிந்தராஜ பக்ஷவும் முகம் கொடுக்கவேண்டிய சவால் களைப்பற்றி விரிவாக ஆராய வேண்டும்.

இரண்டு கட்சிகளின் சனாதிபதி வேட்பாளர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும்,சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் மகிந்தராஜபக்ஷவும், தேர்தல் களத்தில் உள்ளனர். மகிந்தராஜபக்ஷ பிரச்சாரம் செய்வதற்கு முன்னதாகவே ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரச்சார வேலைகளில் இறங்கியுள்ளார். இவ்வருடம் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது அவரின் பிரச்சாரத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது. இதற்காக அவர் மக்கள் சக்தியைத்திரட்டியதுடன் மக்களிடத்தில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான கையொப்பங்களையும் வேண்டினார். நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்களையும் வைத்தார். இலட்சக்கணக்கான மக்கள் இவரின் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆனபடியால் விக்கிரமசிங்க அவர்கள் பலம் வாய்ந்தவராக முன்னணியில் உள்ளார். ஆனாலும் அவர் எதிர் நோக்கும் சவால்கள் இலகுவானதல்ல.

மூன்று வருடங்களுக்கு முன்னதாக விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டபடியாலும், சமாதான முன்னெடுப்புக்களைப் பற்றி அதிக ஆர்வம் காட்டியபடியாலும் இந்நாட்டின் சிறுபான்மையினங்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுள்ளார். இதனால் சில வேளை சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களின் எதிர்ப்புக்களை சில அரசியல் வாதிக்ள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அவருக்கு எதிராக செயற்படுத்துவதற்கு இடம் உண்டு. இதற்கு முன்னதாக யானையும் புலியும் இரக சிய ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்று பிரச் சாரங்களை நாடு முழுவதிலும் செய்தனர். அதே போல் இம்முறை தேர்தலிலும் இதேமுறை யைக் கையாள இடமுண்டு. ஆனபடியால் சிங் கள மக்களிடம் இருந்து கிளம்பும் எதிர்ப்புக் களைச் சமாளிப்பது இலகுவான காரியம் அல்ல இதேவேளை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான திட்டம் பற்றி இதுவரை தெளிவான விளக்கங்களை மக்கள் முன்வைப்ப தில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டுள்ளார். இதற்கு முன் தேசியகொள்கை பிரகடனத்தை வெளியிட்டார். அது மக்கள் முன் எடுபட வில்லை. ஐக்கிய தேசியக்கட்சியும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இப்பொழுது அவை யாவும் மக்கள் மனதில் இருந்து படிப்படியாக மறைந்த வண்ணம் உள்ளன.

மீண்டும் விக்கிரமசிங்க அவர்கள் இப்பொழுது புதிய தேசியகொள்கைகளைப் பற்றி கதைத்து வருகின்றார். தேர்தலுக்குப் பின் எதிர்க்கட்சியினர்களுடன் கலந்தாலோசிக்கப் போவதாக இப்பொழுது அவர் கூறிவருகின்றார். சந்திரிகா அம்மையார் அரசியலில் இருந்து ஓய்வு பெறலாகாது. தமது அரசாங்கத்தின் கீழ் அவருக்குப்பெரும் பொறுப்புக்களை வழங்கப் போவதாக எதிர்க்கட்சித்தலைவர் கூறியுள்ளார். அதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவர் இந்த நாட்டில் நடந்த சகல தேர்தல்களிலும் தெளிவான தமது கொள்கைகளை நாட்டு மக்களுக்கு முன்வைப்பதில் தோல்வியைக் கண்டுள்ளார். ஆகவே இம்முறை நடக்க இருக்கும் சனாதிபதித் தேர்தலில் மக்களுக்குத் தெளிவான கொள்கைகளை முன்வைப்பது மிக அவசியமாகும். இம்முறை அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக தெளிவான திட்டங்களை முன்வைக்காவிடில் அவர் பெரும் சவாலுக்கு முகம் கொடுக்க நேரிடும். நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளைகளை இவர் முற்றாகக் கட்டுப்படுத்தவேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் சமாதானமும் ஒரு கேள்விக்குறியாகவே அமையும்.

சமாதானத்திற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறையும். அரசு மீண்டும் ஒரு யுத்த நிலையை நோக்கியே முன் செல்ல வேண்டி வரும். சமாதானத்திற்காக முன்னிற்கும் விக்கிரமசிங்கவுக்கு நஷ்டத்தையே உண்டு பண்ணும். இவர் ஒரு சிறந்த அரசியல்வாதி என்றபடியால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு இடம்கொடுக்க மாட்டார் என நம்புகிறோம். இந்நாட்டில் உள்ள வணிகர் சமூகத்தினால் விக்கிரமசிங்கவிற்கு பெரும் நன்மைகள் உண்டு. அவர்களின் அனுசரணை அலைகள் எப்பொழுதும் ரணில்விக்கிரமசிங்கவின் பக்கம் வந்து அடிக்கும். திறந்த பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற படியால் அது நாட்டின் வணிகர்களுக்குப் பெரும் இலாபகரமாக அமையும். ஆனபடியால் வணிகர்களின் நலன்களை எப்படிக்கருதுகின்றாரோ அதேபோல் மூன்றாம் தர மக்களின் நலனகளில் இவர்மிக அக்கறை செலுத்தவேண்டும். இதில் அவர் விவேகமாக செயற்படுவாரானால் மூன்றாம்தர வர்க்க மக்களின் வாக்குகளும் இவரை வந்தடையும். திறந்த பொருளாதாரக் கொள்கைகள் வணிகர்களின் மனதை எப்படிக் கவர்கின்றதோ அதேபோல் மூன்றாம் தர வர்க்க மக்களின் இதயங்களையும் வென்றெடுக்கும் பொருளாதாரக் கொள்கைகளை இவர் முன்வைக்க வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக சமீபத்தில் மகிந்தராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று அவர் தன்னை ஒரு பலம் வாய்ந்த வேட்பாளராகத் தயார்படுத்திக் கொள்ளும் நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவளிக்க ஒன்பது கட்சிகள் முன் வந்துள்ளன. இந்த ஆதரவுகள் முழுமையாக அரசியல் பின்னணி கொண்டதாகும். இவரின் பிச்சாரங்களும் இந்த ஒன்பது கட்சிகளையும் திருப்திப்படுத்தும் பின்னணியில் அமையவேண்டும். இவர் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சாரங்களையே மேற்கொள்ள வேண்டும். மற்றது இவரை தென்பகுதி மக்கள் ஒருசிறந்த பௌத்த தலைவர் என ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த காலங்களில் தன்னைத்தானே பௌத்த தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

ஆகவே இவரை ஜாதிக ஹெல உறுமய கட்சியும் ஜே.வி.பியும் பௌத்தத்தின் காவலனாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஆகவே தாங்கள் முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் சனாதிபதி தேர்தலில் இவரை ஆதரிக்கப் போவதாக பகிரங்கமாகத் தெரிவித்துள்ளன. இவர்களின் அனுசரனையைஎப்படிப் பெற்றுக் கொள்வதென்பதைப் பற்றி மிக ஆழமாக சிந்தித்த வண்ணம் உள்ளார்.

சிங்கள பௌத்த தலைவர் என்ற முறையில் பௌத்தர்களின் செல்வாக்கை அதிகம் பெற்றுள்ளார். ஆனால் சனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பௌத்தர்களின் ஆதரவு மட்டும் இருந்தால் போதாது. நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத முஸ்லிம், தமிழ் சிறுபான்மையினரின் வாக்குகள் இவரின் வெற்றிக்கு தேவைப் படுகிறது.

இப்பிரச்சினையை வெற்றி கொள்வது ராஜபக்ஷவுக்கு மிகச் சிரமானதொன்றாகும். இவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் யுத்தம் சம்பந்தமாகவும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். ஒரு பக்கம் சிங்கள பௌத்தர்களின் சக்தியையும், மறுபக்கம் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவையும் சரிசமமாக, பெறுவதற்கு பெரும் முயற்சி எடுக்க வேண்டும் பௌத்தர்களைப் பற்றியும், பௌத்தமதத்தைப் பற்றியும் இவர் தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது முன்னுரிமை வழங்கினால் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை இவர் இழக்க நேரிடும். தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை அவர் முன்வைத்தால் சிங்க பௌத்தர்களின் எதிர்ப்புக்களை சம்பாதித்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார். இதனால் பௌத்தர்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவை சென்றடையும், ஆகவே இவற்றை வெற்றி கொள்வது சுலபமான காரியம் அல்ல. இது ராஜபக்ஷவுக்கு பெரும் சவாலகவே உள்ளது. மூன்று இனத்தவர்களையும் திருப்திப்படுத்தும் நிலையை இவர் முதலில் உருவாக்க வேண்டும்.

அவருக்கு சந்திரிகா அம்மையாரும் ஆதரவான ஏனைய அமைச்சர்களும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவாகவும் போர் நிறுத்தத்திற்கு ஆதரவாகவும், செயல்படுபவர்கள். அதேபோல் பாராளுமன்றத்தில் உள்ள சிறுபான்மை முஸ்லிம், தமிழ் கட்சிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் போர் நிறுத்தத்திற்கும். ஆதரவைக் கொடுப்பவர்கள். ஆனால் ஜாதிகஹெல உறுமயக் கட்சியும் ஜே.வி.பியும் இதற்கு எதிர் மாறானவர்கள் இந்த இரு கட்சியின் சவாலகளை சமாளிப்பது மிகக் கடினமான விடயமாகும். ஆனால் இவற்றுக்கான சரியான பதிலை இதுவரைக்கும் பொதுமக்களுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கொடுக்கவில்லை. எது எப்படியானாலும் சனாதி பதித் தேர்தலில் இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், போர்நிறுத்தம் சம்பந்தமாகவும் தெளிவான அறிக்கையை மக்கள் முன்வைப்பது மிக அவசியம் இவர் சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் கடந்த நாட்களில் பாவனையாளர் களின் பொருட்கள் விலைகள் அதிகரிப்பு, சுனாமி நிவாரணம் மற்றும் புனர்நிமாண வேலை களின் பின்னடைவு மற்றும் சுனாமி மோசடி களுக்கு இவர் பதில் கூறவேண்டும். அதை இவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஒரு கட்டம் வற்வரி நீக்கி பால்மா விலைகளை குறைப்பது. ஆனால் இவைகள் யாவும் சனாதி பதி தேர்தலில் ராஜபக்ஷவுக்கு பாதகமாகவே அமையும்.

கடந்த காலங்களில் அரசாங்கம் பொருளாதார கொள்கைகளையே முன்வைத்தது. அதற்கு முதலிடம் கொடுத்து அதை நடைமுறைப்படுத்தியது ஆனால் இப்பொழுது இவைகள் யாவும் மாற்றம் அடைந்துள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையை எதிர்த்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளையே பின்பற்றி வருகின்றது. வணிகர்களும் சாதாரணமக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருளாதாரக் கொள்கையை மகிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்வைப்பது மிக அவசியம். அப்பொழுதுதான் இரு சாரர்களின் ஆதரவை மகிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொள்ள முடியும். தற்போதைய இரு சனாதிபதி வேட்பாளர்களும் பலதரப்பட்டசவால்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். இவற்றுக்கு நேராக முகம் கொடுப்பவர்கள்தான் இம்முறை சனா திபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும்இதை இந்த இரு வேட்பாளர்களும் உணர்ந்து செயல் படுவது மிக அவசியமானதாகும். ☼

## தேர்தலை எதிர் நோக்கியுள்ள நிலையில் வலுவான போர் நிறுத்தம் அவசியம்!

### ஐ.தே.க வலியுறுத்து

(கொழும்பு)

நாடு சனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் வலுவான அடிப்படையில் போர் நிறுத்த உடன்பாடு அமுல் செய்யப்படுவதன் அவசியத்தை ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தமது கட்சி முழுமையான கவனத்தை செலுத்தியுள்ளதாக கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அடுத்த சனாதிபதியின் முதல் கடமையாக நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை ஹெல்பின் அம்பாந்தோட்டை பிரச்சினை தொடர்பில் திறந்த நிலை விவாதத்திற்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது,

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா இந்த அழைப்பை பிரதம மந்திரியின் அலுவலக அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார். அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பிரதம மந்திரியின் அலுவலக அதிகாரிகள் தவறான கருத்துக்களை வெளியிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆழிப்பேரலை நிவாரணத்திற்காக கிடைத்த சுமார் எட்டுக் கோடி ரூபாவை பிரதம மந்திரி தமது சொந்தக் கணக்கில் வைப்பிலிட்டமையை மறைக்கும் முயற்சியாகவே இந்தக் கருத்துக்கள் அமைந்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். (32)

## நாட்டில் பொதுத் தேர்தலை முதலீட்டாளர்கள் விரும்பவில்லை

(கொழும்பு)

நாட்டில் உடனடியாகப் பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெறுவதை முதலீட்டாளர்கள் விரும்பவில்லை என கொழும்பு பங்குச் சந்தை தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

கடந்தவெள்ளிக்கிழமையன்று உயர் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டமையை அடுத்து கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகளில் சாதகப் போக்கு காணப்பட்டது.

முதலீட்டாளர்கள் சனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறுவதை ஆதரிக்கும் நிலையையே இது வெளிக்காட்டியது.

எனினும் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் அது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்குமென முதலீட்டாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை சனாதிபதித் தேர்தலின்பிரதான வேட்பாளர்களின் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கைக்கு முதலீட்டாளர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர்கள் மகிந்த ராஜபக்ஷவின் பொருளாதாரக் கொள்கையை தாம் எதிர்பார்ப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (32)

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/2424 திருமதி.ஆச்சிப்பிள்ளை கந்தையா.
யா/சா/2427 திருமதி.சவரினா பாக்கியம் ஏபிரகாம்.
யா/சா/2429 திரு.துரைராசா ஜெகதீஸ்வரன்.
யா/சா/2433 திரு.தீயோகு சின்னப்பு.
யா/சா/2438 திரு.முருகேசு குமாரசாமி.
யா/சா/2481 திரு.சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்.
யா/சா/2482 திரு.சின்னத்தம்பி பேரம்பலம்.
யா/சா/2495 திரு.வேலுப்பிள்ளை கந்தையா.
யா/சா/2501 திருமதி.செல்லம்மா செல்லையா.
யா/சா/2504 திரு.சின்னையா கருணைலிங்கம்.
யா/சா/2509 திரு.கந்தர் நடராசா.
யா/சா/2510 திரு.கந்தர் நடராசா.
யா/சா/2513 திரு.கந்தையா அம்பலவாணர்.
யா/சா/2515 திரு.கந்தையா அம்பலவாணர்.
யா/சா/2520 திரு.குமாரசாமி தில்லைநாதன்.
யா/சா/2535 திரு.தம்பிமுத்து வினாசித்தம்பி.
யா/சா/2536 திரு.வைத்திலிங்கம் கோவிந்தசாமி.
யா/சா/2546 திரு.தில்லையம்பலம் வன்னியசிங்கம்.
யா/சா/2571 திரு.சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/சா/2574 திருமதி.பரமேஸ்வரி கைலாசபிள்ளை.
யா/சா/2579 திரு.பொன்னையா நடராசா.
யா/சா/2580 திரு.முருகேசு தாமோதரம்பிள்ளை.
யா/சா/2586 திரு.தம்பு சிதம்பரப்பிள்ளை.
யா/சா/2590 திருமதி.மீனாட்சிப்பிள்ளை திருஞானசம்பந்தர்.
யா/சா/2597 திரு.சின்னையா சிவராமலிங்கம்.
யா/சா/2605 திரு.சுவீணி ஞானராஜ்தேவா.
யா/சா/2609 திரு.முருகப்பா பஞ்சாமி.
யா/சா/2611 திரு.செல்லையா சின்னையா.
யா/சா/2617 திரு.கந்தையா சரவணமுத்து.
யா/சா/2623 திரு.முருகப்பா நடராசசுந்தரம்.
யா/சா/2627 திரு.சரவணை நாகமணி.
யா/சா/2644 திரு.நாகமுத்து கணபதிப்பிள்ளை.
யா/சா/2646 திருமதி.கமலம் முத்தையா.
யா/சா/2647 திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்.
யா/சா/2648 திரு.கந்தையா வேலாயுதம்.
யா/சா/2655 திருமதி.தெய்வானைப்பிள்ளை செல்லையா.
யா/சா/2677 திருமதி.நாகம்மா சிவகுரு.
யா/சா/2682 திருமதி.தங்கமுத்து சின்னத்துரை.
யா/சா/2706 திரு.மயில்வாகனம் சிற்றம்பலம்.
யா/சா/2707 திரு.வாரித்தம்பி கதிரேசபிள்ளை.
யா/சா/2726 திருமதி.பூரணம் செல்லத்துரை.
யா/சா/2727 திருமதி.புவிநாயகம் சின்னக்குட்டி.
யா/சா/2730 திரு.வேலாயுதர் செல்லையா.
யா/சா/2737 திருமதி.செல்லாச்சி கதிரன்.
யா/சா/2738 திருமதி.அன்னபூரணம் செல்வதிசைநாயகம்.
யா/சா/2741 திரு.சின்னத்தம்பி நாகலிங்கம்.
யா/சா/2759 திரு.விசுவலிங்கம் இராசநாயகம்பிள்ளை.
யா/சா/2766 திரு.ஆறுமுகம் சிவபாதசுந்தரம்.
யா/சா/2784 திரு.வயிரவன் தம்பையா.
யா/சா/2785 திருமதி.சிவநாயகம் சின்னத்துரை.
யா/சா/2791 திருமதி.புவிநாயகம் சின்னக்குட்டி.
யா/சா/2797 திரு.கதிரன் கதிரேசு.
யா/சா/2804 திரு.சின்னத்தம்பி கந்தையா.
யா/சா/2819 திரு.வயிரவன் தாமோதரி.
யா/சா/2828 திரு.கதிர்காமு மயில்வாகனம்.
யா/சா/2839 திருமதி.தவமணி தங்கராசா.
யா/சா/2844 திரு.கதிர்காமு சின்னன்.
யா/சா/2850 திருமதி.வள்ளிப்பிள்ளை சின்னப்பொடியன்.
யா/சா/2870 திருமதி.பவாணி காசிப்பிள்ளை.
யா/சா/2886 திரு.கதிர்காமர் இராசையா.
யா/சா/2888 திரு.வேலன் கந்தையா.
யா/சா/2915 திருமதி.அன்னப்பிள்ளை சுப்பையா.
யா/சா/2921 திரு.செல்லையா இராசரத்தினம்.
யா/சா/2922 திரு.பெரியதம்பி மார்க்கண்டு.
யா/சா/2936 திரு.இராமு சின்னத்தம்பி.
யா/சா/2951 திரு.மயில்வாகனம் வைத்திலிங்கம்.
யா/சா/2956 திரு.முதலித்தம்பி செல்லத்துரை.
யா/சா/2970 திரு.சின்னையா சங்கரப்பிள்ளை வைரமுத்து.
யா/சா/2974 திரு.வினாசித்தம்பி தம்பிப்பிள்ளை.
யா/சா/2978 திருமதி.பொன்னம்மா ஐயாத்துரை.
யா/சா/2987 திரு.செல்லப்பா கந்தசாமி.
யா/சா/2995 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/சா/3006 திரு.கார்த்திகேசு கோவிந்தப்பிள்ளை.
யா/சா/3020 திரு. பொன்னர் நாகலிங்கம்.
யா/சா/3029 திரு.கார்த்திகேசு நடராசலிங்கம்.
யா/சா/3053 திரு.சின்னத்தம்பி கனகரத்தினம்.
யா/சா/3063 திரு.வேலுப்பிள்ளை நாகராசா.
யா/சா/3071 திரு.குஞ்சர் விநாசித்தம்பி மகாலிங்கம்.
யா/சா/3072 திரு.மாரிமுத்து செல்லையா.
யா/சா/3080 திருமதி.வன்னியம்மை அப்பாக்குட்டி.
யா/சா/3082 திரு.மயில்வாகனம் அருணாசலம்.
யா/சா/3083 திருமதி.வேதநாயகி பத்மநாதன்.
யா/சா/3088 திரு.கந்தையா நடராசா.
யா/சா/3104 திரு.இளையதம்பி செல்லத்துரை.
யா/சா/3107 திரு.தேவசகாயம் இராசையா.
யா/சா/3121 திரு.நாகமுத்து துரைசிங்கம்.
யா/சா/3131 திரு.பூதர் நாகலிங்கம்.
யா/சா/3150 திருமதி.சிவபாக்கியம் கந்தசாமி.
யா/சா/3169 திருமதி.நாகமணிப்பிள்ளை சதாசிவம்.
யா/சா/3172 திரு.சின்னக்குட்டி இராசா.
யா/சா/3181 திருமதி.சரஸ்வதி ஆறுமுகம்.
யா/சா/3189 திருமதி.கனகம்மா பொன்னையா.
யா/சா/3200 திரு.கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்.
யா/சா/3207 திரு.பொன்னையா விநாயகமூர்த்தி.
யா/சா/3212 திருவினாசித்தம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/3227 திருமதி.தெய்வானைப்பிள்ளை வீரகத்தி.
யா/சா 3231 திரு.வேலுப்பிள்ளை நடராசா.
யா/சா/3240 திருமதி.சிவகாமிப்பிள்ளை சின்னையா.
யா/சா/3252 திரு.பொன்னையா பாலகிருஸ்ணன்.
யா/சா/3282 திருமதி.பகவதிப்பிள்ளை கந்தையா.
யா/சா/3285 திருமதி.நல்லம்மா கந்தையா.
யா/சா/3293 திரு.கந்தையா நடராசா.
யா/சா/3297 திரு.வினாசித்தம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/3298 திருமதி.இராசமணியம்மா காங்கேசு.
யா/சா/3311 திரு.நாகலிங்கம் தனபாலசிங்கம்.
யா/சா/3314 திரு.கதிரித்தம்பி பொன்னுத்துரை.
யா/சா/3331 திரு.சின்னத்தம்பி கந்தையா.
யா/சா/3338 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/சா/3349 திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/3353 திரு.சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு.
யா/சா/3357 திரு.வல்லிபுரம் கந்தையா.
யா/சா/3359 திரு.பண்டாரம் அருணாசலம் இராசையா.
யா/சா/3363 திரு.மூத்ததம்பி சின்னத்தம்பி.
யா/சா/3374 திருமதி.பூரணம் பஞ்சாட்சரம்.
யா/சா/3383 திரு.சுப்பிரமணியம் சச்சிதானந்தம்.
யா/சா/3403 திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/3417 திருமதி.நாகம்மா கந்தையா.
யா/சா/3425 திரு.சின்னத்தம்பி கந்தசாமி.
யா/சா/3432 திரு.ஞானக்குட்டி ஐயாத்தம்பி.
யா/சா/3445 திரு.தாமோதரம்பிள்ளை இராமலிங்கம்.
யா/சா/3455 திரு.வேலுப்பிள்ளை செல்வராசா.
யா/சா/3459 திருமதி.மகேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/சா/3466 திருமதி.சிதம்பரம் செல்லையா.
யா/சா/3471 திரு.சிவசம்பு கணேசன்.
யா/சா/3485 திரு.வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை.
யா/சா/3501 திருமதி.இராசம்மா கந்தசாமி.
யா/சா/3529 திரு.சுப்பிரமணியம் சாம்பசிவம்.
யா/சா/3537 திரு.கார்த்திகேசு தம்பிப்பிள்ளை.
யா/சா/3538 திரு.கந்தையா குமாரசாமி.
யா/சா/3540 திரு.ஆறுமுகம் மார்க்கண்டு.
யா/சா/3553 திரு.இராசகாரியர் லட்சுமிநாதன்.
யா/சா/3554 திரு.கணபதிப்பிள்ளை செல்லையா.
யா/சா/3566 திருமதி.சிவபாக்கியம் யோகநாதன்.
யா/சா/3568 திரு.சின்னத்தம்பி காசித்தம்பி மயில்வாகனம்.
யா/சா/3574 திரு.பொன்னையா குஞ்சையா.
யா/சா/3580 திரு.சின்னப்பு நல்லதம்பி.
யா/சா/3603 திரு.தம்பிப்பிள்ளை இராசையா.
யா/சா/3609 திரு.நாகமணி கணபதிப்பிள்ளை.
யா/சா/3610 திருமதி.சின்னம்மா கதிரித்தம்பி.
யா/சா/3621 திருமதி.தெய்வானைப்பிள்ளை சரவணமுத்து.
யா/சா/3645 திரு.கந்தர் செல்லத்துரை.
யா/சா/3649 திரு.கந்தையா பரமலிங்கம்.
யா/சா/3651 திருமதி.தெய்வானைப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/3682 திரு.பொன்னம்பலம் சர்வானந்தன்.
யா/சா/3689 திரு.வினாசித்தம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/3691 திரு.வேலுப்பிள்ளை மார்க்கண்டு.
யா/சா/3692 திருமதி.எலிசபெத் ஞானப்பிரகாசம்.
யா/சா/3700 திரு.வேலுப்பிள்ளை கைலாயபிள்ளை.
யா/சா/3702 திரு.பொன்னையா வெற்றிவேலு.
யா/சா/3705 திரு.நல்லதம்பி இராமலிங்கம்.
யா/சா/3723 திரு.வினாசித்தம்பி சுப்பிரமணியம்.
யா/சா/3725 திரு.எஸ்தாக்கி வலத்தீஸ்.
யா/சா/3729 திரு.கந்தன் ஆறுமுகம்.
யா/சா/3730 திரு.தம்பையா இரத்தினசபாபதி.
யா/சா/3738 திரு.கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்.
யா/சா/3743 திரு.கந்தையா கணபதிப்பிள்ளை
யா/சா/3754 திரு.சின்னத்தம்பி சின்னக்குட்டி.
யா/சா/3775 திரு.ஆறுமுகம் பேரம்பலம்.
யா/சா/3806 திரு. ஆறுமுகம் கந்தையா.
யா/சா/3807 திரு.பொன்னம்பலம் அம்பிகைபாகன்.
யா/சா/3808 திருமதி.மகேஸ்வரி நடராசா.
யா/சா/3814 திரு.முதலித்தம்பி காசித்தம்பி.
யா/சா/3839 திரு.சோமசுந்தரம் வைத்திலிங்கம்.
யா/சா/3847 திருமதி.தங்கம்மா வைரமுத்து.
யா/சா/3854 திரு.கந்தையா வேலுப்பிள்ளை.
யா/சா/3864 திரு.சின்னத்தம்பி கதிர்காமு.
யா/சா/3866 செல்வி.தர்மினி சதானந்தம்.
யா/சா/3905 திரு.சுந்தரம் சிவசம்பு.
யா/சா/3925 திரு.ஆறுமுகம் பசுபதி.
யா/சா/3942 திரு.ஆறுமுகம் தருமலிங்கம்.
யா/சா/3951 திரு.பேரம்பலம் சரவணமுத்து.
யா/சா/3974 திரு.சின்னத்தம்பி சிவனையா.
யா/சா/3977 திரு.முருகர் இராசரத்தினம்.
யா/சா/3983 திரு.கதிரமலை இராமலிங்கம் ஐயர்.
யா/சா/4001 திரு.கந்தையா சிதம்பரநாதர்.
யா/சா/4021 திரு.செல்லையா குணரத்தினம்.
யா/சா/4022 திரு.செல்லையா குணரத்தினம்.
யா/சா/4027 செல்வி.பரமேஸ்வரிபிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/4031 திரு.சட்டநாதர் குலநாயகம்.
யா/சா/4034 திரு.கணபதி சின்னத்தம்பி.
யா/சா/4035 திரு.அருணாசலம் ஆறுமுகம்.
யா/சா/4049 திரு.வேலுப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை.
யா/சா/4068 திருமதி.பரமேஸ்வரி சரவணமுத்து.
யா/சா/4085 திருமதி.இந்திராதேவி நடராசபிள்ளை.
யா/சா/4096 திரு.நாகேந்திரம் தம்பிப்பிள்ளை.
யா/சா/4099 திரு.வேலுப்பிள்ளை முருகேசு.
யா/சா/4108 திரு.சின்னத்தம்பி கந்தையா.
யா/சா/4109 திரு.சின்னப்பா செல்லத்தம்பி.
யா/சா/4111 திரு.சந்தையினார் வேலுப்பிள்ளை.
யா/சா/ 4112 திரு.கனபதி சின்னன்.
யா/சா/4119 திரு.குமார் நடராசா.
யா/சா/4127 திரு.கந்தர் சின்னத்தம்பி.
யா/சா/4132 திரு.இராமலிங்கம் பரமாநந்தர்.
யா/சா/4164 திருமதி.சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/சா/4168 திரு.சின்னத்தம்பி முருகேசு.
யா/சா/4169 திரு.சின்னத்தம்பி பசுபதிப்பிள்ளை.
யா/சா/4176 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/4192 திரு.பரமானந்தர் வேலாயுதம்பிள்ளை.
யா/சா/4193 திருமதி.இலட்சுமி கணபதி.
யா/சா/4198 திரு.சின்னர் இளையதம்பி.
யா/சா/4207 திரு.சிதம்பரநாதன் சுப்பிரமணியம்.
யா/சா/4208 திரு.கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை.
யா/சா/4221 திரு.சின்னக்குட்டியர் பொன்னம்பலம்.
யா/சா/4227 திரு.விசுவநாதர் தனபாலசிங்கம்.
யா/சா/4256 திருமதி.வள்ளிநாயகி சின்னத்தம்பி.
யா/சா/4274 திரு.மாணிக்கம் முத்தன்.
யா/சா/4279 திரு.அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை.
யா/சா/4283 திருமதி.முத்துப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/சா/4301 திரு.தம்பு மயில்வாகனம்.
யா/சா/4305 திரு.மாப்பாணி இராசதுரை.
யா/சா/4306 திரு.செல்லையா சுப்பிரமணியம்.
யா/சா/4314 திரு.வீரகத்தியர் சேனாதிராசா.
யா/சா/4316 திருமதி.இலட்சுமி தாமோதரம்பிள்ளை.
யா/சா/4322 திரு.சின்னையா கணேசலிங்கம்.
யா/சா/4332 திருமதி.எவுசேனி அந்தோனி.
யா/சா/4337 திரு.அருணாசலம் கணபதிப்பிள்ளை.
யா/சா/4340 திரு.முருகுப்பிள்ளை கதிர்காமத்தம்பி.
யா/சா/4361 திருமதி.மகேஸ்வரி நடராசா.
யா/சா/4363 திரு.செல்லையா சரவணமுத்து.
யா/சா/4387 திரு.வேலுப்பிள்ளை நடராசா.
யா/சா/4388 திருமதி.பொன்னம்மா வேலாயுதபிள்ளை.
யா/சா/4391 திரு.செல்லையா சடாச்சரம்.
யா/சா/4395 திருமதி.நாகம்மா சிவகுருநாதன்.
யா/சா/4398 திரு.வேலுப்பிள்ளை ஆதிரைநாதன்.
யா/சா/4404 திரு.பிரான்சிஸ் இராசேந்திரம்.
யா/சா/4425 திருமதி.அருளம்மா எற்வேட் ஜோர்ஜ்.
யா/சா/4441 திரு.ஆழ்வாப்பிள்ளை இராமச்சந்திரன்.
யா/சா/4447 திருமதி.சரஸ்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/4455 திருமதி.சரஸ்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/4470 திரு.ஜோசப் டானியல் அரியநாயகம்.
யா/சா/4474 திரு.வேலன் கிட்டினன்.
யா/சா/4506 திரு.வீரகத்தி வீரசிங்கம்.
யா/சா/4515 திரு.பொன்னையா தம்பியையா.
யா/சா/4532 திருமதி.பாக்கியம் செல்லையா.
யா/சா/4534 திரு.கந்தையா நாகலிங்கம்.
யா/சா/4538 திரு.வேலுப்பிள்ளை அருணாசலம்.
யா/சா/4544 திரு. கந்தையா ஐயாத்துரை.
யா/சா/4545 திருமதி.பாக்கியம் செல்லையா.
யா/சா/4549 திரு.வினாசித்தம்பி கந்தையா.
யா/சா/4567 திரு.வல்லிபுரம் கந்தையா.
யா/சா/4570 திரு.சரவணமுத்து வைத்திலிங்கம்.
யா/சா/4574 திரு.கணபதிப்பிள்ளை கந்தையா.
யா/சா/4576 திருமதி.சிவகாமிப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/சா/4588 திரு.கந்தையா தில்லையம்பலம்.
யா/சா/4589 திருமதி.அன்னம்மா ஐயாத்துரை.
யா/சா/4592 திருமதி.சின்னம்மா இராமநாதன்.
யா/சா/4600 திருமதி.விசாலாட்சி பரமானந்தம்.
யா/சா/4603 திரு.காசிப்பிள்ளை நவரத்தினம்.
யா/சா/4608 திருமதி.திரேசம்மா இன்னாசிமுத்து.
யா/சா/4613 திரு.சந்திரசேகரம் நடராசா.
யா/சா/4621 திரு.சதாசிவம் பாலசுப்பிரமணியம்.
யா/சா/4626 திரு.சங்கரப்பிள்ளை குணபாலசிங்கம்.
யா/சா/4633 திரு.சின்னத்தம்பி பாலசிங்கம்.
யா/சா/4637 திருமதி.சரவணமுத்து சின்னத்தங்கம்.
யா/சா/4639 திரு.கதிர்காமர் குழந்தைவேலு.
யா/சா/4644 திரு.வேலுப்பிள்ளை சின்னையா.
யா/சா/4647 திரு.இளையதம்பி ஐயாத்துரை.
யா/சா/4652 திரு.தியாகராசா வெற்றிவேலு.
யா/சா/4676 திரு.ஆறுமுகம் இளையதம்பி.
யா/சா/4677 திரு.முத்துத்தம்பி ஒப்பிலாமணி.
யா/சா/4684 திரு.சுவாமிநாதர் வினாசித்தம்பி.
யா/சா/4702 திரு.குமாரசாமி கார்த்திகேசு.
யா/சா/4709 திரு.அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்சேவியர்.
யா/சா/4720 திரு.ஞானப்பிரகாசம் எஸ்ரனிஸ்லோஸ்.
யா/சா/4721 திரு.மத்தேசு தேவசகாயம்.
யா/சா/4724 திரு.சின்னத்தம்பி யோகரத்தினம்.
யா/சா/4726 திருமதி.பொன்னம்மா கந்தையா.
யா/சா/4730 திரு.வினாசித்தம்பி நடராசா.
யா/சா/4734 திருமதி.சரஸ்வதி சுப்பையா.
யா/சா/4742 திருமதி.மரியம் இரத்தினராசா.
யா/சா/4750 திரு.சந்திரசேகரர் இராசரத்தினம்.
யா/சா/4753 திரு.இராமநாதர் அம்பலவானர்.
யா/சா/4762 திரு.சிவசுப்பிரமணியம் தயானந்தன்.
யா/சா/4764 திரு.பெரியதம்பி பாலசிங்கம்.
யா/சா/4766 திருமதி.செல்லாச்சி பொன்னையா.
யா/சா/4772 திருமதி.சிதம்பரம் சின்னத்தம்பி.
யா/சா/4789 திரு.கந்தையா பேரம்பலம்.
யா/சா/4807 திரு.வாரித்தம்பி சின்னத்துரை.
யா/சா/4814 திருமதி.இராஜகுமாரி விக்னேஸ்வரன்.
யா/சா/4820 திரு.சங்கரப்பிள்ளை பேரம்பலம்.
யா/சா/4823 திருமதி.சிவபாக்கியம் இராமநாதர்.
யா/சா/4862 திரு.கனகசபை அருணாசலம்.
யா/சா/4863 திரு.பூதன் செல்லன்.
யா/சா/4866 திரு.வேலுப்பிள்ளை இராசரத்தினம்.
யா/சா/4871 திரு.சரவணமுத்து பொன்னம்பலம்.
யா/சா/4874 திருமதி.நாகரத்தினம் முருகேசு.
யா/சா 4876 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

**சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு**

மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/211 திருமதி.இலட்சுமி பரமு.
யா/சா/213 திரு.கதிரவேலு நல்லையா.
யா/சா/224 திரு.செல்லப்பா கார்த்திகேசர்.
யா/சா/230 திரு.பசுபதி குழந்தைவேலு.
யா/சா/247 திரு.கதிரவேலு கந்தையா.
யா/சா/250 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/சா/252 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/சா/269 திரு.கதிரவேலு நல்லையா.
யா/சா/273 திரு.சடையர் ஆறுமுகம்.
யா/சா/275 திரு.சிதம்பரப்பிள்ளை சோமநாதர்.
யா/சா/280 திருமதி.இலட்சுமிப்பிள்ளை வீரசிங்கம்.
யா/சா/288 திரு.செல்லையா :சின்னத்துரை.
யா/சா/305 திரு.செல்லையா சின்னத்துரை.
யா/சா/312 திரு.சேதுகாவலர் சங்கரப்பிள்ளை.
யா/சா/327 திரு.வேலாயுதர் கதிர்காமு.
யா/சா/333 திரு.காசிப்பிள்ளை ஆறுமுகம்.
யா/சா/340 திருமதி.தங்கம்மா சின்னத்தம்பி.
யா/சா/359 திருமதி.சிவபாக்கியம் சோமசுந்தரம்.
யா/சா/374 திரு.சுப்பிரமணியம் பொன்னம்பலம்.
யா/சா/380 திரு.பொன்னையா தன்மாவரதர்.
யா/சா/406 திரு.சுப்பிரமணியம் கனகசபாபதி.
யா/சா/407 திரு.சுப்பிரமணியம் கனகசபாபதி.
யா/சா/416 திரு.சங்கிலியன் இராமு.
யா/சா/425 திரு.சின்னப்பா செல்லத்துரை.
யா/சா/428 திருமதி.சின்னன் ஏரம்பு.
யா/சா/437 திருமதி.அன்னம்மா அம்பலவாணர்
யா/சா/441 திரு.நடராசா கந்தையா.
யா/சா/458 திரு.கந்தர் சிவஞானம்.
யா/சா/465 திரு.தம்பாபிள்ளை வன்னியசிங்கம்.
யா/சா/466 திரு.கதிர்காமு வெற்றிவேலு.
யா/சா/468 திரு.கந்தையா துரை.
யா/சா/485 திருமதி.பரிமளம் கனகசபை.
யா/சா/489 திரு.சுப்பையா கந்தசாமி
யா/சா/491 திரு.சின்னையா திசைவீரசிங்கம்.
யா/சா/502 திரு.பகவான் நித்தியானந்தன்.
யா/சா/505 திரு.வேதலிங்கம் தம்பித்துரை.
யா/சா/507 திரு.மார்க்கண்டு சுப்பிரமணியம்.
யா/சா/520 திருமதி.இராசமணி துரைசாமி.
யா/சா/529 திரு.செல்லையா திருநாவுக்கரசு.
யா/சா/541 திரு.ஐயாத்துரைஐயர் ஞானசர்மா.
யா/சா/547 திருமதி.அபிராமி பாலசிங்கம்.
யா/சா/559 திரு.கார்த்திகேசு கனகராசா.
யா/சா/598 திருமதி.யோகாம்பிகை தவரத்தினம்.
யா/சா/622 திருமதி.சரஸ்வதி ஐயாத்துரை.
யா/சா/625 திரு.சபாபதிப்பிள்ளை கோபாலகிருஸ்ணன்.
யா/சா/626 திரு.கார்த்திகேசு சதாசிவம்.
யா/சா/627 திரு.கந்தையா கனகரத்தினம்.
யா/சா/632 திரு.கந்தையா பொன்னையா
யா/சா/684 திருமதி.செல்லம்மா பொன்னன்.
யா/சா/686 திருமதி.சரஸ்வதி சிவஞானசுந்தரம்.
யா/சா/700 திருமதி.சின்னப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/701 திரு.சின்னத்துரை இரத்தினம்.
யா/சா/702 திருமதி.சின்னப்பிள்ளை சின்னத்தம்பி
யா/சா/705 திரு.சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/சா/755 திரு.வைரமுத்து பொன்னுத்துரை.
யா/சா/756 திரு.வேலாயுதம்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/சா/779 திருமதி.பொன்னி முருகன்.
யா/சா/796 திரு.சாணையன் பொன்னையா.
யா/சா/797 திரு.சாணையன் பொன்னையா.
யா/சா/800 திரு.வயிரமுத்து பொன்னுத்துரை.
யா/சா/805 திருமதி.சரஸ்வதி ஐயாத்துரை.
யா/சா/819 திரு.சுப்பிரமணியக்குருக்கள் நடராசக்குருக்கள்.
யா/சா/828 திரு.கணபதிப்பிள்ளை சின்னப்பு.
யா/சா/829 திரு.நல்லசேகரம்பிள்ளை பரமசாமி.
யா/சா/833 திரு.தம்பையா இளையதம்பி.
யா/சா/838 திருமதி.மகேஸ்வரி காசிநாதர்.
யா/சா/839 திரு.முத்துக்குமாரு பொன்னுச்சாமி.
யா/சா/845 திரு.தம்பிப்பிள்ளை இராமச்சந்திரன்
யா/சா/868 திரு.வல்லி கந்தன்.
யா/சா/869 திருமதி.பாக்கியம் நவரத்தினம்.
யா/சா/872 திரு.கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்.
யா/சா/875 திருமதி.பரமேஸ்வரி விஸ்வநாதன்.
யா/சா/910 திரு.சின்னத்தம்பி வைரவிப்பிள்ளை.
யா/சா/911 திரு.வீரகத்தி முத்திலிங்கம்
யா/சா/918 செல்வி.திலகவதி தியாகராசா.
யா/சா/920 திரு.கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்.
யா/சா/933 திரு.கதிரர் கிருஷ்ணபிள்ளை.
யா/சா/940 திரு.தம்பு நடராசா.
யா/சா/941 திரு.கந்தன் சின்னத்தம்பி.
யா/சா/947 திருமதி.தங்கரத்தினம் சபாரத்தினம்.
யா/சா/952 திருமதி.இராசாம்பாள் பொன்னுச்சாமி.
யா/சா/961 திரு.நல்லசேகரம்பிள்ளை நடராசா.
யா/சா/962 திரு.மாணிக்கம் தம்பிமுத்து.
யா/சா/977 திரு.கந்தன் முருகேசு.
யா/சா/995 திரு.கதிரன் சோமு.
யா/சா/1011 திரு.வேலுப்பிள்ளை மார்க்கண்டு.
யா/சா/1017 திரு.ஆறுமுகம் நமசிவாயம்.
யா/சா/1020 திரு.சரவணமுத்து தியாகராசா.
யா/சா/1027 திரு.நிர்சிங்கர் ஆறுமுகம்.
யா/சா/1030 திரு.சின்னவன் ஆறுமுகம்.
யா/சா/1045 திரு.அருணாசலம் கந்தையா.
யா/சா/1046 திரு.நாகமணி கனகரத்தினம்.
யா/சா/1048 திரு.தில்லைநாதர் சுப்பிரமணியம்
யா/சா/1061 திருமதி.சாந்தம்மா சுப்பிரமணியம்.
யா/சா/1066 திரு.சின்னப்பு குமாரசாமி.
யா/சா/1087 திரு.அருணாசலம் குமாரவேலு
யா/சா/1092 திருமதி.அன்னம்மா விசுவலிங்கம்.
யா/சா/1105 திரு.முருகுப்பிள்ளை தம்பையா.
யா/சா/1106 திரு.தில்லையம்பலம் மகேசன்.
யா/சா/1120 திரு.பேதுரு பிலிப்ஸ்.
யா/சா/1122 திரு.சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்.
யா/சா/1124 திரு.முருகேசு சண்முகம்.
யா/சா/1136 திரு.கதிரேசு மாணிக்கம்.
யா/சா/1147 திரு.பேதுறு எட்வேட்.
யா/சா/1148 திரு.பேதுறு எட்வேட்.
யா/சா/1149 திருமதி.சிவக்கொழுந்து சரவணமுத்து.
யா/சா/1150 திரு.கதிரவேலு கந்தையா.
யா/சா/1160 திரு.பொன்னையா ஜெயமோகன்.
யா/சா/1166 திருமதி.பாக்கியம் வல்லிபுரம்.
யா/சா/1172 திரு.சபாரத்தினம் கனகரத்தினம்.
யா/சா/1186 திரு.தம்பிப்பிள்ளை அருணாசலம்.
யா/சா/1190 திரு.அப்பாபிள்ளை நடராசா.
யா/சா/1196 திரு.தம்பிப்பிள்ளை தியாகராசா.
யா/சா/1199 திரு.வேதவனம் கதிரேசு.
யா/சா/1202 திரு.கதிரவேலு கந்தையா.
யா/சா/1209 திரு.இராசக்கோன் குழந்தைவேலு.
யா/சா/1218 திரு.கந்தையா துரைராசா
யா/சா/1226 திரு.பேதுறு பிலிப்ஸ்.
யா/சா/1227 திரு.பேதுறு பிலிப்ஸ்.
யா/சா/1237 திரு.கதிர்காமர் கந்தையா.
யா/சா/1248 திரு.வேதவனம் தம்பு.
யா/சா/1255 திருமதி.ஜெயலட்சுமி குழந்தைவேலு.
யா/சா/1260 திரு.மயில்வாகனம் சிதம்பரநாதன்.
யா/சா/1261 திரு.சுந்தரமூர்த்தி சிவானந்தன்.
யா/சா/1264 திரு.கணபதிப்பிள்ளை இராசதுரை.
யா/சா/1273 திரு.கந்ததாசகுருக்கள் சிவராசசர்மா.
யா/சா/1274 திரு.கந்தையா பொன்னுத்துரை.
யா/சா/1275 திரு.கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நாகராசா.
யா/சா/1290 திரு.கந்தையா கணேசலிங்கம்.
யா/சா/1303 திரு.வினாசித்தம்பி சுப்பிரமணியம்.
யா/சா/1313 திருமதி.நாகம்மை தம்பிரத்தினம்.
யா/சா/1338 திருமதி.விசாலாட்சி நடராசா.
யா/சா/1351 திருமதி.செல்வி தம்பையா.
யா/சா/1357 திருமதி.தங்கம்மா நாகராசா.
யா/சா/1361 திரு.ஆறுமுகம் வல்லிபுரம்.
யா/சா/1365 திரு.ஆறுமுகம் கார்த்திகேசு.
யா/சா/1370 திரு.செல்லப்பா இராமலிங்கம்.
யா/சா/1371 திருமதி.சிவக்கொழுந்து சிவப்பிரகாசம்.
யா/சா/1391 திருமதி.அன்னபூரணம் சுப்பிரமணியம்.
யா/சா/1395 திரு.சரவணை சின்னத்துரை.
யா/சா/1397 திரு.ஆறுமுகம் நமசிவாயம்.
யா/சா/1401 திரு.பரமு இராசரத்தினம்.
யா/சா/1409 திருமதி.தையல்நாயகி மாணிக்கவாசகர்.
யா/சா/1410 திருமதி.நாகம்மா கந்தையா.
யா/சா/1427 திருமதி.செல்வரத்தினம் இராசஇரத்தினம்.
யா/சா/1435 திரு.அருணாசலம் சின்னத்தம்பி பொன்னுச்சாமி.
யா/சா/1439 திரு.கனகரத்தினம் இராசசிங்கம்.
யா/சா/1462 திருமதி.யோகம்மா கார்த்திகேசு.
யா/சா/1464 திரு.செல்லையா தம்பு.
யா/சா/1477 திரு.இராமலிங்கம் தேவராசா.
யா/சா/1479 திரு.சின்னத்தம்பி ஐயம்பிள்ளை.
யா/சா/1480 திரு.செல்லையா குமாரசாமி.
யா/சா/1486 திரு.அப்பாத்துரை தனபாலசிங்கம்.
யா/சா/1494 திருமதி.அன்னமுத்து சின்னத்தம்பி.
யா/சா/1495 திரு.கார்த்திகேசுபொன்னம்பலம்.
யா/சா/1513 திரு.வினாசித்தம்பி செல்லையா.
யா/சா/1517 திரு.காசித்தம்பி படைவீரசிங்கம்.
யா/சா/1524 திரு.கதிராமு சின்னத்தம்பி.
யா/சா/1531 திரு.கந்தையா குமாரசாமி.
யா/சா/1534 திரு.வேலுப்பிள்ளை வாரித்தம்பி.
யா/சா/1541 திரு.வல்லிபுரம் விக்கினேஸ்வரன்.
யா/சா/1545 திரு.கந்தையா தங்கராசா.
யா/சா/1560 திரு.சின்னப்பு இராசையா.
யா/சா/1564 திரு.செல்லையா இளையதம்பி.
யா/சா/1569 திரு.குமரையா படைவீரசிங்கம்.
யா/சா/1575 திருமதி.இராசம்மா பொன்னம்பலம்.
யா/சா/1578 திரு.காசிப்பிள்ளை யோகநாதன்.
யா/சா/1589 திருமதி.புளோறா புஸ்பராணி சாமுவேல்.
யா/சா/1603 திருமதி.நல்லம்மா தம்பிராசா.
யா/சா/1608 திரு.செல்லையா மயில்வாகனம்.
யா/சா/1624 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/சா/1626 செல்வி.சத்தியதேவி பொன்னையா.
யா/சா/1627 திரு.சின்னத்துரை தியாகராசா.
யா/சா/1635 திருமதி.இரத்தினபூபதி நடராஜா.
யா/சா/1640 திருமதி.சோதிமலர் நடேஸ்வரன்.
யா/சா/1642 திருமதி.புவனேஸ்வரி இராமநாதன்.
யா/சா/1643 திரு.மாணிக்கம் சந்திரன்.
யா/சா/1645 திருமதி.மனோன்மணி முருகேசு.
யா/சா/1653 திரு.செல்லையா நடராசா.
யா/சா/1676 திருமதி.மகேஸ்வரி காசிநாதர்.
யா/சா/1679 திரு.மாணிக்கம் சதாசிவம்.
யா/சா/1681 திருமதி.கண்மணி கனகராசா.
யா/சா/1683 திரு.கந்தையா விசுவலிங்கம்.
யா/சா/1695 திரு.வேலுப்பிள்ளை தியாகராஜா.
யா/சா/1699 திரு.சின்னத்தம்பி செல்லையா.
யா/சா/1701 திரு.குலநாயகம் பசுபதிப்பிள்ளை.
யா/சா/1702 திருமதி.செல்வமணி பேரம்பலம்.
யா/சா/1712 திருமதி.நவமணி வல்லிபுரம்
யா/சா/1715 திரு.சரவணமுத்து பாலசிங்கம்.
யா/சா/1717 திரு.செல்லமுத்து நமச்சிவாயம் குருசாமி.
யா/சா/1723 திரு.சோமசுந்தரம் சண்முகராசா.
யா/சா/ 1738 திருமதி.அன்னலட்சுமி எவேட்ஸ்.
யா/சா/ 1739 திரு.வயிரமுத்து சரவணமுத்து.
யா/சா/1742 திரு.செல்வரத்தினம் நீக்கிலாஸ் அரசரத்தினம்.
யா/சா/1751 திரு.தம்பிப்பிள்ளை வேலாயுதம்.
யா/சா/1759 திரு.கந்தையா சீவரத்தினம்.
யா/சா/1774 திரு.சின்னத்துரை கனகசபை
யா/சா/1777 திரு.நல்லதம்பி தர்மராஜா.
யா/சா/1781 திரு.இரத்தினவரதர் குலசிங்கம்.
யா/சா/1782 திரு.செல்லத்துரை பாலசுப்பிரமணியம்.
யா/சா/1785 திருமதி.நல்லம்மா மகாராசா.
யா/சா/1788 திரு.சின்னப்பர் துரையப்பா.
யா/சா/1793 திரு.வல்லிபுரம் இராசையா.
யா/சா/1794 திரு.ஆறுமுகம் ஐயாத்துரை.
யா/சா/1798 திரு.வல்லிபுரம் வேலாயுதபிள்ளை.
யா/சா/1802 திரு.வல்லிபுரம் கயிலாயபிள்ளை.
யா/சா/1804 திரு.முத்துக்குமாரு சபாரத்தினம்.
யா/சா/1808 திருமதி.பாக்கியம் சண்முகம்.
யா/சா/1814 திரு.கதிரவேலு குமாரசாமி.
யா/சா/1816 திரு.வல்லிபுரம் தர்மலிங்கம்.
யா/சா/1819 திருமதி.திலகவதி குமாரசாமி.
யா/சா/1822 திரு.இராசையா மயிலுப்பிள்ளை.
யா/சா/1825 திரு.வேலுப்பிள்ளை கந்தையா.
யா/சா/1832 திருமதி.நல்லம்மா சுப்பையா.
யா/சா/1836 திரு.சின்னத்தம்பி சதாசிவம்.
யா/சா/1846 திருமதி.பத்மாவதி ஜெகநாதன்.
யா/சா/1853 திரு இராசேந்திரா சபாபதிப்பிள்ளை.
யா/சா/1865 திரு.மயில்வாகனம் வேலாயுதம்.
யா/சா/1869 திரு.செல்லப்பா குமாரசாமி.
யா/சா/1871 திருமதி.பரமரத்தினம் மகாலிங்கம்.
யா/சா/1876 திரு.செல்லப்பா குமாரசுவாமி.
யா/சா/1888 திரு.தளையசிங்கம் நவரட்ணராஜா.
யா/சா/1889 திருமதி.நாகேஸ்வரி நாகராசா.
யா/சா/1890 திரு.கணபதிப்பிள்ளை பரமசாமி.
யா/சா/1894 திரு.தளையசிங்கம் நவரட்ணராசா.
யா/சா/1898 திருமதி.செண்பகவல்லி இராமச்சந்திர ஐயர்.
யா/சா/1899 திருமதி.தங்கரட்ணம் மகாதேவன்.
யா/சா/1901 திருமதி.மகேஸ்வரி கந்தையா.
யா/சா/1931 திருமதி.கனகம்மா கணேசமூர்த்தி.
யா/சா/1934 திரு.சின்னக்குட்டி கந்தையா.
யா/சா/1972 திரு.தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்.
யா/சா/1978 திரு.பரமு முருகேசு.
யா/சா/1982 திரு.றெஜினோல்ட் துரைராஜ்ராஜீ அல்பிரட் இராஜசிங்கம்ராஜீ.
யா/சா/1991 திருமதி.சரஸ்வதி கணபதிப்பிள்ளை.
யா/சா/1993 திரு.பரமு கைலாசபிள்ளை.
யா/சா/2005 திருமதி.அமிர்தாம்பிகை சிதம்பரபிள்ளை.
யா/சா/2013 திருமதி.நாகம்மா தில்லைநாதன்.
யா/சா/2035 திரு.சின்னையா வடிவேலு.
யா/சா/2055 திருமதி.ஆரோக்கியராணி செல்லக்கண்டு.
யா/சா/2074 திரு.பொன்னம்பலம் நவரத்தினம்.
யா/சா/2079 திரு.சுப்பையா கணபதிப்பிள்ளை.
யா/சா/2081 திரு.நமசிவாயம் வேலுப்பிள்ளை.
யா/சா/2096 திரு.இரங்கசாமி துரைசாமி.
யா/சா/2101 திரு.சரவணமுத்து பூதத்தம்பி.
யா/சா/2102 திரு.சுப்பையா தம்பாபிள்ளை.
யா/சா/2108 திரு.சபாரெத்தினம் கதிரவேல்.
யா/சா/2109 திரு.சண்முகம் ஜெகதீசன்.
யா/சா/2110 திரு.அருணாசலம் பரமசாமி.
யா/சா/2114 திரு.சரவணமுத்து தாமோதரம்.
யா/சா/2121 திரு.முருகேசு சுப்பிரமணியம்.
யா/சா/2123 திருமதி.பரமேஸ்வரி கணேசன்.
யா/சா/2135 திரு.சின்னையா குமாரசாமி.
யா/சா/2146 திரு.வல்லிபுரம் ஆறுமுகம்.
யா/சா/2154 திருமதி.பொன்னம்மா சுப்பிரமணியம்.
யா/சா/2178 திரு.சோமசுந்தரம் ஸ்ரீதரன்.
யா/சா/2181 திரு.சட்டநாதர் கந்தசாமி.
யா/சா/2183 திரு.செல்லையா தம்பிராசா.
யா/சா/2185 திரு.அருளானந்தன் நீலகண்டன்.
யா/சா/2187 திரு.கந்தையா விநாயகமூர்த்தி.
யா/சா/2189 திரு.செல்லர் பரராசசிங்கம்.
யா/சா/2192 திரு.சின்னத்தம்பி ரவீந்திரன்.
யா/சா/2195 திருமதி.கமலாஜெனி தாமோதரம்பிள்ளை.
யா/சா/ 2229 திரு.நமசிவாயம் மகாதேவன்.
யா/சா/2238 திரு.டானியல் வேதநாயகம்.
யா/சா/2240 திருமதி.சின்னம்மா கந்தையா.
யா/சா/2248 திருமதி.புனிதவதி இராமலிங்கம்.
யா/சா/2252 திரு.கந்தையா இராசரட்ணம்.
யா/சா/2253 திருமதி.பறுபதம் கந்தையா.
யா/சா/2257 திருமதி.இராசலட்சுமி செல்லத்துரை.
யா/சா/2264 திரு.சின்னத்தம்பி வீரகத்தி.
யா/சா/2266 திரு.நாகமுத்து தங்கவடிவேல்.
யா/சா/2267 திரு.நாகமுத்து தங்கவடிவேல்.
யா/சா/2275 திருமதி.மகேஸ்வரி நடராசா.
யா/சா/2277 திரு.பொன்னம்பலம் சிவபாதசுந்தரம்.
யா/சா/2281 திருமதி.அமராவதி கனகசுந்தரம்.
யா/சா/2299 திரு.ஐயாத்துரை சிற்றம்பலம்.
யா/சா/2305 திரு.சரவணமுத்து வெற்றிவேற்பிள்ளை.
யா/சா/2308 திரு.அருளம்பலம் நவரத்தினம்.
யா/சா/2312 திரு.நமசிவாயம் ஞானசுந்தரம்.
யா/சா/2332 திரு.விநாயகமூர்த்தி சபாநாயகம்.
யா/சா/2341 திரு.சின்னத்துரை கணபதிப்பிள்ளை.
யா/சா/2349 திரு.மயில்வாகனம் சுவாமிநாதன்.
யா/சா/2377 திருமதி.தங்கமணி கனகரட்ணம்.
யா/சா/2414 திரு.முத்து மாணிக்கம்.
யா/சா/2418 திருமதி.பொன்னம்மா சிவசம்பு.

தொடரும்...

## புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை விளையாட்டுக் கழகம் நடாத்தும்

## 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி–2005

புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை விளையாட்டுக் கழகத்தினராகிய நாம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றை கிளி. முல்லை மாவட்ட கழகங்களுக்கிடையில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

ஒரு கழகத்திலிருந்து எத்தனை அணிகளும் விண்ணப்பிக்கலாம்.

பதிவுக்கட்டணம்:–ரூபா 500.00
விண்ணப்ப முடிவுத்திகதி:–15.09.2005

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடங்கள்
1. அப்பன் உதிரிகள்வாணிபம் புதுக்குடியிருப்பு
2. இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கிளிநொச்சி.

உதிக்கும்திசை விளையாட்டுக்கழகம்,
புதுக்குடியிருப்பு.

(6606)

# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ் காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான கோதுமை மாவினை (பிறீமா கிறீன் பிரான்ட்) வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப. நோ.கூ. சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோக்கிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|
| ஒக்ரோபர் 2005 | 200 மெற்றிக் தொன் |
| நவம்பர் 2005 | 200 மெற்றிக்தொன் |
| டிசெம்பர் 2005 | 200 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2005.09.15 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி .இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபரும்,
முல்லைத்தீவு மாவட்டம்

(சி.12657)

# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான புழுங்கல் (சிவப்பு நாடு) வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப. நோ.கூ.சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோக்கிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|
| ஒக்ரோபர் 2005 | 260 மெற்றிக் தொன் |
| நவம்பர் 1005 | 260 மெற்றிக்தொன் |
| டிசெம்பர் 2005 | 260 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2015.09.15 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபரும்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.12656))

# துயர்பகிர்வோம்

## கமலாதேவி பரஞ்சோதி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரியும் திருமதி சாந்தினி இராஜேஸ்வரன் அவர்களின் தயார் கமலாதேவி பரஞ்சோதி அவர்கள் இறைபதமெய்திபமை எம் எல்லோரையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயரில் பகிர்கொள்வோம்.

நலன்புரிச் சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்,
மாங்குளம்.

(சி.12659)

## கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி

# அறிவித்தல்

சகல கடைகளிலும் உணவகங்கள் சமையல் அறைகள் ஆகிய இடங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளை ஒவ்வொருநாளும் மாலை ஐந்து மணியளவில் பொறுப்பேற்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சகல உரிமையாளர்களும் தவறாது சேரிக்கப்படும் கழிவுகளைக் கையளித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்.

**"நாளைய தினம் ஒரு தூய சுற்றாடலை உருவாக்கும் பணியில் அனைவரதும் ஆதரவும் ஒத்துழைப்பும் மிக அவசியமாகும்"**

(பொன் நித்தியானந்தன்)
சிறப்பு ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12655)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
வடக்குகிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி விரிவாக்கற் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல:- 2084-SRI (SF)

# கேள்வி அறிவித்தல்–இல :53

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு, அபிவிருத்தி விரிவாக்கல்திட்ட *(NECORD-Extension)* ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ('ஆ.அ.வ') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் *NECORD* திட்டக் கேள்விச்சபைத்தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD.Ext/HS/01 | சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையின் நிர்வாகத் தொகுதி. கட்டடம் 48 கட்டில்கள் அடங்கிய வைத்தியவிடுதி புனர்நிர்மாணம் | M4 கட்டடம் | 420,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள். நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ்மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD உடன் M4 (கட்ட டங்கள்)க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும். அல்லது வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுடைய நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற சங்கங்களால் வழங்கப்பட்ட இதற்குச்சமமான பதிவுச் சான்றிதழ்களைக் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடொன்றினைச்சேர்ந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரராக இருக்க வேண்டும்.

04 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், நீகோட்திட்டம்,55,கந்தசுவாமி கோவில்வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:- 026-2227434, பக்ஸ:- 026-2227401, இணையதள முகவரி: www.necord.org ஈமெயில: necord @sltnet.lk)

05 கேள்வி ஆவணங்களை 29.08.2005 இல் இருந்து 16.09.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5000/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

06 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும். என்பவுடன் இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம்,திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

07 பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச் சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 30.09.2005 பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

08 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று நீகோட் திட்ட காரியாலயம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் 16.09.2005 ஆம் திகதி அன்று பிற்பகல் 2.30 க்கு நடைபெறும்.

09 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர்,கேள்விச்சபை,
நீகோட் திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி.12654)

# பங்களாதேசுக்கு எதிரான முதலாவது போட்டி சிறிலங்கா அணிக்கு 88 ஓட்ட வெற்றி



சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், சிறிலங்கா அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் சிறிலங்கா அணி 88 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதாக அறிவித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தரங்க 60 ஓட்டங்களையும், அத்தப்பத்து 55 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 50 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெயவர்த்தன 35 பந்துகளை எதிர்கொண்டு 50 ஓட்டங்களை பெற்று ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் பைசியா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

270 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த் பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை பெற்றது.





துடுப்பாட்டத்தில் நவீஸ் 39ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது மசூத், பைசியா முறையே 39,22ஓட்டங்களைப்பெற்றனர். இதில் இறுதி விக்கெட் இணையான மசூத், பைசியா 54 ஓட்டங்களை இணைப்பாட்டத்தில் பெற்று பங்களாதேஷ் கிரிக்கெட் வரலாற்றில் புதிய சாத னையை ஏற்படுத்தினர். பந்து வீச்சில் மஹ்ரூப் மூன்று விக்கெட்டுக்களையும், உப்புள் சந்தன பெர்னாண்டோ தலா இரண்டு விக்கெட்டுக்களையும், டில்சான் ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

சுப்பஸ்ரார் முறை சிறிலங்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்போட்டியில் உப்புள்சந்தன 12ஆவது வீரராக களமிறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக ஜெயவர்த்தன தெரிவானார்.

# 20 ஓவர் போட்டியில் மைக்கல் வோர்ன்



எதிர்வரும் சனியன்று ஹெடிங்லேயில் நடைபெறவுள்ள யோக்சயர் - இங்கிலாந்து 11 பேர் அணிகள் பங்கு பற்றும் 20 ஓவர் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஹெடிங்லேயை தாயகமாக கொண்ட மைக்கல் வோர்ன் பங்கு பற்றுவார் என அறிவிக்கப்படுகிறது.

இப் போட்டிக்காக ஏற்கனவே இரண்டாயிரம் நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகியுள்ளன.

இது தொடர்பாக அணியின் பயிற்றுனர் டங்கன் பிளச்சர் தெரிவிக்கையில்; ஆஷஸ் தொடரில் பங்கு பற்றும் வீரர்கள் அனைவரும் அங்கு வரவிருப்பதாகவும், ஆஷஷில் எத்தனை பேர் பங்கு பற்றுவர் என்பது தெரியாது என்றும் தெரிவித்துள்ளதுடன் அது ஒரு குதூகலமான நாளாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் எசெக்ஸ் அணியுடனான இரண்டு நாள் போட்டியொன்றில் அவுஸ்திரேலிய அணி வரும் மூன்றாம், நான்காம் திகதிகளில் பங்கேற்கவிருக்கின்றது.

# தமது அணி ஆஷஸ் தொடரை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றும்-ஹொக்காட்



ஆஷஸ் கிண்ண நான்காவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி பெற்றுத்தந்த கடைவரிசை துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹொக்காட் தமது அணி தொடரை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பத்து வருடங்களுக்குப்பின்னரான அணி திறமையாக செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், எதிர்காலத்திலும் நன்கு பிரகாசிக்கும் என்றார்.

ஹொக்காட் இறுதியாக நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியாவின் பிரட்லி, ஷேன் வோர்ன் ஆகியோரின் பந்து வீச்சை சமாளித்து வெற்றி நோக்கி ஆடினார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது; அஸ்லி ஹைஸ்ஸ் மட்டுமே 32 ஆவது வயது அனுபவ வீரர் என்றும், ஏனைய வீரர்கள் 20 வயதை மட்டும் தாண்டிய இளம் வீரர்கள் என்றும் கடந்த இரு வருடங்களில் தென்னாபிரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும் காட்டிய திறமையினால் இந்த தொடரை கைப்பற்றுவது உறுதி என்றும் தெரிவித்துள்ளார்.




# அணியிலிருந்து ஹைடனை நீக்க வேண்டும் அவுஸ். முன்னாள் வீரர் ஸ்லேட்டர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் இருந்து ஹைடனை நீக்க வேண்டும் என்று முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் மைக்கேல் ஸ்லேட்டர் கூறியுள்ளார்.

ரிக்கிபொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் பயணம்செய்து விளையாடி வருகிறது. இந்த பயணத்துக்கு முன்பு வரை தலை நிமிர்ந்து நின்ற அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்கு சென்ற பின்னர் சறுக்கலுக்கு மேல் சறுக்கலை சந்தித்து வருகிறது.

தற்போது நடந்து வரும் ஐந்து டெஸ்ட் போட்டி கொண்ட ஆஷஸ் தொடரில் இதுவரை நான்கு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இதில் தற்போது இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. ஒரு ஆட்டம் சமனிலையில் முடிந்துள்ளது. ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட்போட்டி வரும் எட்டாம் திகதி தொடங்குகின்றது.

டெஸ்ட் போட்டித் தொடர் தொடங்குவதற்கு முன்பு அவுஸ்திரேலிய அணி மீது பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. அந்த அணி 5-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றும் என்று அவுஸ்திரேலிய வீரர் மெக்ராத் நம்பிக்கை தெரிவித்திருந்தார். அந்த எதிர்பார்ப்பு எல்லாம் தற்போது அவுஸ்திரேலியாவின் தோல்வி மூலம் புஸ்வணமாகி விட்டது.

பொதுவாக ஒரு அணி தோல்வியை சந்திக்கிறது என்றால் தொடக்க ஆட்டக்காரர்கள் தான் முதன் முதலாக விமர்சனத்துக்குள்ளாவார்கள். அதே நிலைதான் தற்போதும் ஏற்பட்டுள்ளது. இந்தமுறை விமர்சனத்திற்கு உள்ளாகியிருப்பவர் அவுஸ்திரேலிய தொடக்கவீரர் ஹைடன. ஹைடனுக்கு எதிராக எதிர்ப்புக்கள் கிளம்பிய வண்ணம் உள்ளன. ஹைடனை அணியில் இருந்து நீக்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய முன்னாள் தொடக்க வீரர் மைக்கேல் ஸ்லேட்டர் கூறியுள்ளார் இது குறித்து அவர் கூறியதாவது:-

ஹைடன் இங்கிலாந்து அணிக்கு எதிராக அந்த நாட்டில் 2001 இல் இருந்து மோசமாக ஆடிவருகிறார். குறிப்பாக கடந்த ஒரு ஆண்டாக அவர் மோசமாக ஆடிவருகிறார்.

2004 ஆம் ஆண்டில் இருந்து



இதுவரை டெஸ்ட் போட்டியில் ஹைடன் ஒரு சதம் கூட அடித்தது இல்லை. இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் தோல்விக்கு ஹைடனின் மோசமான ஆட்டமும் முக்கிய காரணம் ஆகும். எனவே அவுஸ்திரேலிய அணியிலிருந்து ஹைடனை நீக்க வேண்டும்.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்டில் ஹைடனுக்கு பதிலாக காடிச்சை தொடக்க வீரராக களம் இறக்க வேண்டும்.அவர் நான்கு நாள் போட்டிகளிலும், ஒரு நாள் போட்டியிலும் சிறப்பாக ஆடி வருகிறார். மேலும் பந்து வீச்சாளர் ஷேன் வாட்சனையும் மீண்டும் அணியில் சேர்க்க வேண்டும் அவரை ஐந்தாவது பந்து வீச்சாளராக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

# சேவாக் பலவீனம் இதுதான் சொல்கிறார் ஷேன் பொண்ட்

நீண்ட இடைவெளிக்குப்பின் அணிக்குத் திரும்பியுள்ள நியூசிலாந்து வேகப்புயல் ஷேன்பொண்ட், இந்திய வீரர்களின் பலவீனங்கள் தனக்குத் தெரியும் என்கிறார்.

முத்தரப்புத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சிறப்பாகப் பந்து வீசி ஆறு விக்கெட் வீழ்த்தியது மகிழ்ச்சி. இந்திய அணி தரமான துடுப்பாட்டவரிசை கொண்டது. அந்த அணிக்கு எதிரான முதல் போட்டியிலேயே என்னால் ஆதிக்கம் செலுத்த முடிந்தது வரவேற்கத்தக்க விடயம்.

அடுத்த போட்டியில் இந்திய துடுப்பாட்டவீரர்கள் எனது பந்து வீச்சை கூடுதல் கவனத்துடன் விளையாடுவார்கள். இந்த நெருக்கடி காரணமாக, அவர்களை என்னால் ஆதிக்கம் செலுத்த முடியும். இந்திய பந்துவீச்சாளர் இர்பான்,அகார்கர், நெஹ்ரா பிரமாதமாகப்பந்து வீசுகின்றனர். இந்தத்தொடரில் அவர்களை விட சிறப்பாக பந்து வீசவேண்டும் அதிக விக்கெட் எடுக்கவேண்டும் என்று உறுதி பூண்டிருக்கிறேன்.

முதல் போட்டியில் இந்திய துடுப்பாட்டக்காரர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டதால்தான் என்னால் விக்கெட் வீழ்த்த முடிந்தது. சவுரவ் கங்குலி, வீரேந்தர் சேவாக் இருவருக்கும் ஷொர்ட்-பிட்ச் பந்துகள் அதிகம் வீசினால் ஆட்டமிழந்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும் அதை முயற்சி செய்தேன் எனது முயற்சி வீண்போகவில்லை இவ்வாறு தெரிவித்துள்ளார் பொண்ட்.

# வரிசையாக தடுமாறினாலும் கங்குலி மீது நம்பிக்கை



சப்பல்

வரிசையாகத் தடுமாறினாலும்கூட, சவுரவ் கங்குலி மீது இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் கிரேக் சப்பல் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சவுரவ் கங்குலி இப்போதெல்லாம் துடுப்பாட்டம் செய்வதையே மறந்து விட்டது போல விளையாடுகிறார். ஆனாலும். அவர் நம்பிக்கையிழக்கவில்லை பயிற்சியாளர் கிரேக் சப்பல்.

"எங்கள் ஆட்டம் திருப்திகரமாக இருக்கிறது துடுப்பாட்டவீரர்கள் மட்டும் கொஞ்சம் கூடுதல் திறமை காட்டவேண்டும். குறிப்பாக, முதல்நிலை துடுப்பாட்ட வீரர் யாராவது ஒருவர் கடைசிவரை நின்று சதம் அடித்தால்தான் அணிக்கு நல்லது. இனிவரும் போட்டிகளில் அதையும் திருத்திக்கொள்வோம் என உறுதியளிக்கிறேன்." என்றார் கங்குலி.

பயிற்சியாளர் கிரேக்சப்பல் அளித்த பேட்டியில்; "சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் துடுப்பாட்டவீரர்கள் நிதானமாக ஆடியதாக குற்றம் சாட்டுகின்றனர். அது தவறு. ஆடுகளம் பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்தது. இந்த ஆடுகளத்தில் இப்படித்தான் ஆட முடியும். தலைவர் சவுரக் துடுப்பாட்டம் பற்றியும் விமர்சனங்கள் வருகின்றன. இந்தப் போட்டியில் அவரது ஆட்டத்தைப் பார்த்தேன். தன்னம்பிக்கையும் ஆக்ரோஷமும் அவரது ஆட்டத்தில் தெரிந்தது. அவரது ஆட்டம் எனக்கு திருப்தியளிக்கிறது" என்றார்.

## சிந்தனைக்கு



சமூகநீதி சரிவரப் பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# ஒடுக்குமுறையின் ஓர் அங்கமே...!

சிங்களப் பேரினவாத சக்திகளும் அவர்களின் கூலிகளாகச் செயற்படும் இனவிரோதக்குழுக்களும் தமிழ் தேசியத்திற்கு ஆதரவான, அதனை வலியுறுத்தும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது ஒன்றும் புதியதொன்றல்ல. இதன் காரணமாக பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுமுள்ளனர்.

இந்தவகையில் சுடரொளி பத்திரிகை நிறுவனத்தின்மீது நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் அங்கு பணியாற்றிய டேவிட் செல்வரத்தினம் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். உடமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இத்தகைய சம்பவங்கள் இத்துடன் நின்றுவிடும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

இது சுடரொளி பத்திரிகை நிறுவனம் மீதும் அதன் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் முதலாவது தாக்குதல் அல்ல. அதற்கு முன்னரும் சுடரொளி பணிமனைமீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும் உள்ளனர். இந் நிலையானது ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர் என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

இதேவேளை சுடரொளி பத்திரிகை நிறுவன ஊழியர் கொல்லப்பட்டமைக்கு ஜே.வி.பியே காரணமென பலராலும் நம்பப்படுகின்றது. இதனை சுடரொளி தொடர்பாக ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச அண்மைக் காலத்தில் பேசிய பேச்சுக்கள் ஊர்ஜிதம் செய்வனவாகவுள்ளன. சுடரொளி பத்திரிகை விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளதாக அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால் தமிழ் தேசியத்திற்கு ஆதரவளிக்கும் – வலியுறுத்தும் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதென்பது ஜே.வி.பியினால் ஆரம்பிக்கப்பட்டதல்ல. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டதெனலாம். ஒடுக்குமுறை ஆட்சியாளர்களின் இச்செயல்களுக்கு ஈ.பி.டி.பி போன்ற தேசவிரோதக் குழுக்களும் உறுதுணையாக இருந்துள்ளன.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துவதானது கருத்துச் சுதந்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட அடி என்பது பொதுப்படையான அபிப்பிராயமாகும். அத்தோடு சிறுபான்மை இனங்களின் உரிமை குறித்துக் குரல் எழுப்பும் ஊடகங்கள் மீது தாக்குதல் நடாத்துவது சிறுபான்மை இனங்கள் மீதான ஒடுக்குமுறையின் ஓர் அங்கமாகவே கொள்ளத்தக்கது.

பேரினவாத அரசியல் வாதிகளைப் பொறுத்து சிறுபான்மையினரின் உரிமைக்குக் குரல் கொடுக்கும் எவராயினும் சரி, எவையாயினும் சரி அவை ஒடுக்கப்பட வேண்டியவையே ஆகும். இந்த வகையிலேயே ஊடகங்களும் பார்க்கப்படுகின்றன. ஊடகங்கள் என்பதற்காக – அதாவது கருத்துச் சுதந்திரம் என்பதற்காக விசேட தகைமை எதையும் அவை வழங்கத் தயாராக இல்லை.

அதிலும் குறிப்பாக ஜே.வி.பி சகிப்புத் தன்மை அற்றதாக இருப்பதற்கும், கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்காமைக்கும் காரணங்களும் உண்டு. ஒரு புறத்தில் ஜே.வி.பி ஒரு சனநாயக மரபுசார்ந்த கட்சியோ அன்றி சனநாயகப் பாரம்பரியத்தின் ஊடாக அரசியலில் பிரவேசித்த கட்சியோ அல்ல.

தனது அரசியல் வழி முறையில் இரு தடவைகள் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டு அரசியலில் போக்கிடமின்றி தவித்துக் கொண்டிருக்கையில் சனநாயகப் பண்புகளில் காணப்பட்ட வாய்ப்புக்களும், சிறிலங்காவில் அதிகாரப் போட்டியில் ஈடுபட்ட இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல் சதுரங்க விளையாட்டின் காரணமாகவும் பாராளுமன்ற அரசியலுக்கு இழுத்து வரப்பட்டதே ஜே.வி.பி ஆகும். ஆகையினால் ஜே.வி.பியிடம் சனநாயகப் பண்புகள் காணப்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

மற்றொரு புறத்தில் அரசியலுக்குள் பிரவேசித்துள்ள ஜே.வி.பி.யினர் தம்மை இடதுசாரிகள் என அடையாளப்படுத்திக் கொண்டாலும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கே தலைமை தாங்குவதற்கு முற்பட்டு நிற்கின்றனர். இந்நிலையில் ஏற்கனவே பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கப் போட்டியிடும் கட்சிகளை விட தீவிரம் காட்டவேண்டிய அவசியத்தில் அது உள்ளது. இந் நிலையில் இக்கட்சியிடம் இருந்து தீவிர ஒடுக்குமுறைச் செயல்கள் வெளிப்படுவது எதிர்பார்க்கத்தக்கதே.

ஆனால் இச்செயற்பாடு தனியாக தமிழ் ஊடகத்துறைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்ற ரீதியில் மட்டுமே நோக்கப்படுமானால் இதன் விரிவாக்கத்தின்போது சிங்கள ஊடகவியலாளர்களும், சிங்கள ஊடகங்களும் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் ஏற்றுக்கொண்டு மௌனமாக இருக்கவேண்டியதாகவே இருக்கும். ஏனெனில் ஜே.வி.பி போன்ற சக்திகள் கடந்த காலத்தில் சிங்கள மக்களுக்கும், அமைப்புக்களுக்கும் எதிராகச் செயற்பட்ட வரலாறும் உண்டு.

# இந்திய மீன்பிடிப் படகுகள்அத்துமீறல்; தடுத்து நிறுத்த போ.நி.க.குழுவுடன் ஆராய்வு

வடமராட்சி கடற்பகுதிக்குள் கடந்த சில வாரங்களாக இந்திய மீனவர்களின் வலுக்கூடிய மீனவப் படகுகளில் அத்துமீறி நுழைந்து அடாவடி புரிந்து வருகின்றனர். இவ்வாறு நேற்று முன்தினம் 300 இற்கு மேற்பட்ட இந்திய மீனவப் படகுகள் வடமராட்சி கடல் பிரதேசத்திற்குள் அத்துமீறி நுழைந்து மீன்களை அள்ளிச் சென்றதுடன், வடமராட்சி வாழ் மீனவர்களின் வள்ளங்களையும், வலைகளையும் சேதப்படுத்தியும் சென்றுள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாடு அடங்கிய மகஜர் ஒன்று கடந்தவாரம் வடமராட்சி கடல் தொ.கூ.ச.சமாசத்தினரால் இலங்கை போ.நி.க. குழுவினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு வடமராட்சி கடல்பிரதேசத்திற்குள் அத்துமீறி உட்புகுந்த இந்திய மீனவர்கள் தொடர்பாக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் வடமராட்சி கடற்றொழிலாளர் கூ.ச.சமாசத்தினர் நடத்திய கலந்துரையாடல் நேற்றுக்காலை பத்து மணியளவில் வடமராட்சி கடல் தொ.கூ.ச.சமாச செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் தெரிவிக்கப்பட்டதாவது; எமது கடற் பிராந்தியத்துள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவ இழுவைப் படகுகள் எமது மீன் வளங்களை அள்ளிச் செல்வது மட்டுமன்றி, சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்போதே மீன்பிடித்தொழிலுக்கு செல்லும் எமது மீனவர்களின் படகுகளை சேதமாக்குவதுடன், மீன்பிடி வலைகளையும் நாசம் பண்ணிச் செல்கின்றனர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை தொன்றுதொட்டு இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடித்து வருகின்றோம். இன்று நேற்று அல்ல. இதைக் கட்டுப் படுத்துவதானால் அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்து எங்களுக்கு ஒரு மாற்று நடவடிக்கை செய்தாலொழிய தொடர்ந்து அங்கு போய் மீன்பிடித்துத்தான் வருவோம். வேறு வழியே கிடையாது என தமிழ்நாடு இராமேஸ்வரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் தேவதாஸ் கூறியுள்ளார். (கா)

# சனாதிபதித் தேர்தலுக்கு ரூ. 930 மில்லியன்

## நிதியொதுக்க திறைசேரியிடம் கோரல்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்காக 930 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தருமாறு தேர்தல் ஆணையாளர் தயாநந்த திஸாநாயக்க திறைசேரியிடம் எழுத்து மூலமாக கேட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் உதவித் தேர்தல் ஆணையாளர்களை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலங்களாக நீடித்தது. இதன்போது தேர்தல் நடத்த வேண்டிய ஒழுங்குகள், அமைக்க வேண்டிய வாக்குச்சாவடிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை சனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பப் பணிகளை உடனடியாக செயற்படுத்துமாறு தேர்தல் ஆணையாளர் உதவி ஆணையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சந்திப்பின் தொடர்ச்சி அடுத்த வாரமும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# தமிழ் ஊடகங்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அவசியம்

## - பாராளுமன்றில் பெ. சந்திரசேகரன்

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுதந்திரமான கருத்தைக்கூறும் தமிழ் ஊடகங்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டுமெனப் பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று பாராளுமன்ற அமர்வின் போது தமிழ் மக்களின் சுதந்திரமான கருத்தைக் கூறும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை சுடரொளி பத்திரிகை சுதந்திரமாக நடத்தப்படுவதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்போர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில் சுடர்ஒளி பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதல் குறித்து 20 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக கிராண்ட்பாஸ் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இருப்பினும் இந்த விசாரணையில் முக்கிய தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் கூறப் படுகிறது. (32)

# சனாதிபதித் தேர்தல் தொடர்பான ஐ.தே.க–ஹெல உறுமய பேச்சு தோல்வி

## – கூட்டணி குறித்து ரணில் மௌனம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்தன.

அனைத்து பௌத்த பிக்குகள் கட்சி ஜாதிக ஹெல உறுமய சார்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடாத்தப்பட்டது.

இப்பேச்சுக்கள் குறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்ற போதும் எமது சாரி ஐ.தே.கவுடன் கூட்டணியை உருவாக்க இயலாது என்று கூறினார்.

இப்பேச்சுக்களில் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்து மட்டுமே விவாதிக்கப்பட்டன என்றும் தமது நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார் என்றும் கூறிய அத்துரலிய ரத்ன தேரர் இருகட்சிகளுக்கும் இடையே எதிர்காலத்தில் கூட்டணி அமைப்பது தொடர்பான எதுவித நம்பிக்கையும் ரணில் வெளிப்படுத்தவில்லை என்றார்.

# மகிந்த – ஜே.வி.பி. குழுவினர் மீண்டும் சந்தித்துப் பேச்சு

## –பேச்சில் பூரண திருப்தி இல்லை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பி. குழுவினர் நேற்று மாலை மீண்டும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர். இச்சந்திப்பு குறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய ஜே.வி.பி. குழுவினர் மகிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுகள் திருப்தியளிக்காததால் இன்னும் தொடர்ந்து ஆலோசனைகள் நடத்தப்படவேண்டி இருக்கிறது என்றனர்.

மகிந்த ராஜபக்ஷவுடன் சுதந்திரக்கட்சி சார்பில் அமைச்சர் மங்கள சமரவீரவும், ஜே.வி.பி. சார்பில் விமல் வீரவன்ச, ரில்வின்சில்வா, அநுர குமார திசாநாயக்க, ஆகியோரும் இப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இதற்கு முந்தைய சுற்றுப் பேச்சில் மகிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனையுடனான ஆதரவு அளிக்கப் படும் என்று ஜே.வி.பி அறிவித்திருந்தது.

# முக்கிய ஆவணங்கள் காணாமல் போயின!

1994 ஆம் ஆண்டு கொழும்பு முகத்துவாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார கூட்டத்தில் கைக்குண்டு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட காமினி திசாநாயக்கவின் வழக்கு சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள் காணாமல் போய் உள்ளதென சட்டமா அதிபருக்கு சிறிலங்கா இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவசியம் இல்லை என சொலிசிஸ்டர் ஜெனரல் சி.ஆர்.த.சில்வா இரகசியப் பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

# சனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை ஒன்றாக நடாத்த சனாதிபதிக்கு ஆலோசனை

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்ற தேர்தலையும் ஒன்றாக நடத்துமாறு சனாதிபதிக்கு அரசாங்கக்கட்சியின் உயர் மட்டத்தினர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தமது கட்சி வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கிலேயே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது..

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் அவர் உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன்றுக்கு செல்வார் என்ற அடிப்படையிலும் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் சனாதிபதி ஏற்கனவே பாராளுமன்றம் கலைக்கப்படாது என்ற உறுதிமொழியை பிரதமரிடம் வழங்கியுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை யார் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அடுத்த வருடம் முதல் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.இதன் மூலம் சனாதிபதி மற்றும் பாராளுமன்ற அதிகாரங்கள் இரண்டையும் ஒரே கட்சிகொண்டிருக்க முடியும். நாட்டின் நிர்வாகத்தை உரிய முறையில் கொண்டு செல்ல முடியும் என்றும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

### சனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவதில் சிக்கல்

சனாதிபதித் தேர்தலுக்கான 930 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதில் சிக்கல்நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீடு தொடர்பான வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் கிடைத்த பின்பே அதனை வழங்க முடியுமென திறைசேரி கூறியுள்ளது.இதனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தின் விசேட அமர்வொன்றைக் கூட்டியே இந்நியைப் பெறமுடியும். ஆனால் சனாதிபதித் தேர்தல் குறித்து சந்திரிகா விருப்பமின்மையுடன் இருப்பதால் இந்நிதி ஒதுக்கீட்டில் சிக்கல் ஏற்படாலம் எனக் கூறப்படுகிறது. (32)

# காணாமல் போன இளைஞர் உருக்குலைந்த சடலமாக மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனைப் பிரதேசத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு வீட்டிலிருந்து இனந்தெரியாத நபர்களினால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன இளைஞர் ஒருவர் நேற்று புதன்கிழமை உருக்குலைந்த நிலையில் சடலமாக வாகனேரியில் கண்டெடுக்கப்பட்டார். புனானை, முள்ளிவெட்டுவான் வாசியான செல்லத்துரை சுரேஸ் (வயது-28 ) என்பவரே இந்த இளைஞர் என் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வாகனேரி காட்டுப்பகுதியில் வாய்க்கால் ஒரத்தில் வீசிய துர்நாற்றத்தையடுத்து அங்கு சென்ற கிராமவாசிகளின் தகவலின் பேரில் இறந்தவரின் தந்தை, ஆடைகளை வைத்து தனது மகன் என அடையாளம் கண்டார்.

வாழைச்சேனை வைத்தியசாலையில் மரண விசாரணை மற்றும் பிரேதப்பரிசோதனைக்காக சடலம் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# பிறேமதாச கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டோர் விடுதலை

(கொழும்பு )

முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிறேமதாசவின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்த 21 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்தது. இந்த விடுதலை சுமார் 12 வருடங்களுக்கு பின்னர் நிகழ்ந்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்களில் ஒருவர் சிங்களவராவார்.

இவர்களுக்கு எதிராக போதிய சாட்சிகள் இல்லை என்ற அடிப்படையில் வழக்கை தொடரமுடியவில்லை என சட்டமா அதிபர் தெரிவித்ததை அடுத்து இரகசிய பொலிசார் விடுதலை தொடர்பில் தமது ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை.

குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்களில் எட்டுப்பேர் மாத்திரமே நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். ஏனையோர் அரசாங்க கட்டுப்பாடில்லாத பிரதேசத்தில் உள்ளவர்கள் என்பதால் அவர்களை ஆஜர் செய்யமுடியவில்லை என இரகசிய பொலிசார் நீதிமன்றில் தெரிவித்தனர். (32)

## மன்னார்..

குழுவின்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டும், மன்னார் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகளின் சார்பில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருந்தவம், மன்னார் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சமகால நிலவரம் தொடர்பான பல்வேறு பிரச்சினை களை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எடுத்துக் கூறினார். இதனையடுத்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிறிலங்கா படைத் தரப்பையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (18)

## தமிழ்...

என்பனவற்றிற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் ஏற்பாட்டில் டிப்போச்சந்தி முதல் கரடிப்போக்கு சந்திவரையும் மற்றும் பொதுவிளையாட்டு மைதானத்திலும் குடிநீர் தாங்கிகள் மூலம் குடிநீர் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதே போன்று கிளிநொச்சி சுகாதார திணைகளத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு, கிளி.மாவட்ட செஞ்சிலுவைச்சங்கம், திலீபன் மருத்துவ சேவை , நலவாழ்வு நிலையம், தமிழீழ சுகாதார சேவை ஆகியன இணைந்து முதலுதவிக்கான சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.மேற்படி முதலுதவிச்சிகிச்சையினை கிளிநொச்சி சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை, கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கமண்டபம், கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம், பிரதேச சபை மண்டபம்,கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம், கிளிநொச்சி பிரதம தபால் நிலையம் மற்றும் மாவட்ட வைத்தியசாலை, டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை ஆகிய இடங்களில் வைத்து மேற்கொள்ளப்படவுள்ளது.தமிழ் தேசிய மாநாட்டினையொட்டி பிற மாவட்டங்களிலிருந்து பிரமுகர்களும், ஊடகவியலாளர்களும் நேற்று நண்பகலிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகைதந்தவண்ணமிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. வருகைமேற்கொண்டவர்களுக்கான சகல ஒழுங்கமைப்புக்களையும் தமிழ் தேசிய எழுச்சிச் செயலணியினர் ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர். (சோ)

- வாகன அனுமதிப்பத்திரம் கேட்டு -

# படையினர் அடாவடியால் வயோதிபர் பரிதாப மரணம்

பொலிஸ், இராணுவத்தினர் வயோதிபரிடம் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கேட்டு கடுமையாக நடந்து கொண்டமையால் வயோதிபர் ஸ்தலத்தில் வீழ்ந்து மரணம் அடைந்துள்ளார். நேற்று மாலை 5.40 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக உள்ள திருநெல்வேலிச் சந்தி பலாலி வீதியில் இடம் பெற்றது.இதில் மரணம் அடைந்தவர் கோண்டாவில் மேற்கு முத்தட்டுமட ஒழுங்கையைச் சேர்ந்த சுந்தரம் சுப்பிரமணியம் (வயது-78) என்பவர் ஆவர்.



வயோதிபர் உந்துருளியில் வந்து கொண்டிருக்கும் போது குறுக்கு. வீதியால் உந்துருளியில் வந்தவர் இவரை முட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற பொலிசார் மற்றவரை செல்லவிட்டு இந்த வயோதிபரை அழைத்து வாகனத்திற்கான ஆவணங்களை கையளிக்கும் படி அச்சுறுத்தியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து பதற்றம் அடைந்த நிலையில் உரிய ஆவணங்களை எடுக்க முனைந்தவேளையில் வயோதிபர் அந்த இடத்திலேயே வீழ்ந்து மரணம் அடைந்தார். வயோதிபர் வீழ்ந்த போதிலும் அதில் நின்ற பொலிசார் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கையை எடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றுள்ளனர். உடனடியாக அயலில் நின்ற இளைஞர்கள் தண்ணீர் தெளித்த போதிலும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டமையால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

இதேநேரம் பொலிசார் இறந்தவரின் உடலை சுமார் 45 நிமிட நேரத்தின் பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போதிலும் அங்குகூடிய இளைஞர்கள் குறிப்பிட்டவரின் உடலை உரியவர்கள் வரும் வரை கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது எனத் தடுத்துவிட்டனர். ஆனாலும் குறிப்பிட்ட இடத்தில் அதிக எண்ணிக்கையான பொலிசாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் பொலிசார் குறிப்பிட்ட இடததில் குவிக்கப்பட்டமை குறிப்பிடக் கூடியதாகும். வெள்ளைத் தொப்பியுடன் நிற்கும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் விசாரணை செய்யும் போதே குறிப்பிட்டவர் மயங்கி வீழ்ந்தார் என்பது சுட்டிக்காட்ட கூடியதாகும்.

குறிப்பிட்ட இடத்திற்கு ஏற்கனவே வந்திருந்த கிராம அலுவலர்கள், நீதிபதி திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் நீதிபதி விரைந்து வந்து உரிய நடவடிக்கைகளை எடுத்ததுடன் யாழ்.போதனாவைத்தியசாலையில் சடலத்தை மரணவிசாரணைக்காக ஒப்படைக்கும் படியும் கட்டளை யிட்டுள்ளார். (41)

## நெரிசலில்...

ஓடிச்சென்றபோது பாலத்தில் இருந்து கூட்டமாக ரைகிறிஸ்நதியில் உயிரைப்பாதுகாக்கும் நோக்கில் குதித்துள்ளனர். இதனால் பெருமளவு மக்கள் நீரில்மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்கள்.

இதன்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி விட்டதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை குறித்த நதியில் மேலும் பல மனித உடல்கள் மிதந்து கொண்டிருப்பதாகவும் இதனால் உயிரிழந்தவர்களின் தொகை மேலும் அதிகமென மீட்புப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் கூறுவதாகவும் செய்திகள் தெரிவக்கின்றன. இதன்போது காயமடைந்த இருநூற்றி ஐம்பது பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதேவேளை இந்தப்பள்ளிவாசலுக்கு சென்றுகொண்டிருந்த இன்னுமொரு தொகுதி ஷியாமுஸ்லிம் மக்கள்மீது ரொக்கெட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஏழுபேர் உயிரிழந்ததுடன்36பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## போர்க்களத்தில்...

தோம். மணலாறு தொடக்கம் மன்னார் வரை இந் நிலவரம் காணப்பட்டது. மக்கள் மனதில் ஒரு அங்கலாயப்பு; இப் போரை வெல்ல முடியுமா என்றொரு கேள்வி எழுந்தது. ஜெயசிக்குறுவை முறியடிக்க போராளிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற சிந்தனை தலைவரின் மனதில் எழுந்தது. தலைவரின் தீர்க்க தரிசனத்தில் உருவாக்கப்பட்டது மக்கள் படை.

எமது இராணுவத்தின் பல்துறை சார்ந்த வளர்ச்சியின் முக்கிய கட்டமாக மக்கள் படையினர் உருவாக்கம் அமைந்தது. ஜயசிக்குறுவை முறிடிக்க ஓயாத அலை - 3 ஐ நாம் ஆரம்பித்தோம். அதற்கு முன்பாக தேசியத் தலைவர் மேசையில் வைக்கப்பட்டிருந்த வரைபடத்தின் மீது கீறிக் காட்டினார். முதலில் ஒட்டுசுட்டானைப் பிடிப்போம். பின்னர் ஒவ்வொரு இடமாகம் கீறிக் காட்டி இவற்றைப் பிடிப்போம் என்று உத்தரவிட்டார். ஒரே ஆச்சரியம் 180 கிலோ மீற்றர் வேலிக்குள் ஒரு வருடம் இரண்டு மாதங்களாக முடங்கிக் கிடந்த போராளிகள் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை முறியடித்து வெற்றியீட்டினோம். இவ்வெற்றிற்குப் பின்னால் எமது மக்கள் படை இருந்தது. சண்டை தொடங்கியதும் எதிரி தனது நிலையிலிருந்து பார்த்தான். மக்கள் படை வெள்ளம் போல் முன்னேறி வந்ததைக் கண்டான். அவன் பின்னோக்கி ஓடினான் என்று கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

மக்கள் படையின் உதவியுடன் திருகோணமலையிலும் பெரிய வெற்றியைப் பெறுவோம். கிராமிய விசேட பயிற்சிப் படையினரின் போர்ப் பயிற்சி பெற்ற முதலாவது தொகுதியினர் பயிற்சியை இப்போது நிறைவு செய்துள்ளனர் என்றும் கேணல் சொர்ணம் கூறினார்.

போர்ப் பயிற்சி வழங்கிய பயிற்சியாளர் கில்மனுக்கு கேணல் சொர்ணம் விசேட பரிசு வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இதுபோல் பயிற்சியில் பல் துறைகளில் திறமை காட்டியவர்களுக்கு கேணல் சொர்ணம பரிசுகளை வழங்கினார். திருமலை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் புரட்சி பரிசில் வழங்கும் நிகழ்வை நடத்தினார். திருமலை மாவட்ட இராணுவத் தளபதி வசந்தன் உட்பட தளபதிகள் நிகழ்வில் பங்கு பற்றினர் நிகழ்வில் மற்றும் பலர் உரை நிகழ்தினர். (25)

## தெகிவளையில்....

தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அடையாள அட்டைகள், உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்திருந்த போதிலும் தேடுதலில் ஈடுபட்டிருந்தவர்கள் அப்பாவி இளைஞர்களைக் கட்டாயப்படுத்தி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதும் சந்தேகத்துக்கிடமான குற்றவாளிகளை நடத்துவது போல் நடத்தியதுடன் கைவிரல் அடையாளங்கள், புகைப்படங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றை பொலிசார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கேள்வியுற்றதும் தெகிவளை பொலிஸ் நிலையம் சென்ற கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இப்பகுதிக்குப் பொறுப்பான துணை பொலிஸ் மா அதிபர் கே.பி. பத்திரணையுடன் தொடர்பு கொண்டு பொலிஸ் அத்தியட்சகர் அரசரத்தினத்தின் ஒத்துழைப்புடன் கைதாகியிருந்த இளைஞர்களில் 20 பேரை நேறறிரவு விடுதலை செய்து பொலிஸ் நிலையத்திற்கு வெளியே காத்திருந்த பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார்.

## மட்டக்களப்பு...

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அருகிலுள்ள வீட்டிலிருந்த யுவதி உட்பட நான்கு பேர் விசாரணைக்காக காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைத் தவிர மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் கடமையின் நிமித்தம் பயணம் செய்து கொண்டிருந்த நீதிபதிக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற பொலிஸ் வாகனம் மீது சந்திவெளியில் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பொலிசார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும் நேற்றுக் காலை நாவலடி வாகரை வீதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களுக்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதும் கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளார்கள்.

இதற்கிடையில் மட்டக்களப்பு பழைய கல்முனை வீதி கல்லடி இராணுவக் காவல் நிலையம் மீது நேற்று முன்தினம் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ள போதிலும் அது வெடிக்காத காரணத்தினால் சேதங்கள் எதுவும் இல்லை என்று சிறிலங்கா பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகத் தலைவர்களே எமது உணர்வுகளை அங்கீகரி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.